# தமிழரசு

1.1.1994 ரூ.3



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

மார்கழித் திங்கள் - 17

மலர்:24 இதழ்:13

1-1-1994

விலை: ரூ.3


## இந்த இதழில்...


மருத்துவத்துக்கு, அறிவியலின் சலனமற்ற பகுத்தறிவு அடிப்படை அவசியம்... — மாண்புமிகு முதல்வர் ... 2

மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ... 9

ஊர் நலம் ஓங்கிட ... 10

வனப்புப் பெறும் வனச் சோலைத் திட்டம் ... 14

இலட்சிய வீரர் இராஜாஜி ... 16

திருச்சிராப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாள் விழா ... 17

டாக்டர் புரட்சித் தலைவரின் ஆறாவது நினைவு நாள் அஞ்சலி ... 19

எந்நாளும் நீ வாழ்க, இதயத்து நிலவாக! (கவிதை) ... 22

காவல்துறை நவீன மயமாக்கப்படும் —மாண்புமிகு முதல்வர் ... 24

மக்களை ஒன்றுபடுத்தும் பெரும் சக்தியைக் கொண்டது இசை —மாண்புமிகு முதல்வர் ... 27

மக்களால் மதிக்கப்படும் மகளிர் காவல் நிலையங்கள் ... 33

நிலவளத்துக்கு ஒரு வங்கி ... 35

"சட்டமன்ற வரலாற்றில் தனக்கு எனத் தனி இடம் பெற்றவர்" —மாண்புமிகு முதல்வர் ... 45







# மருத்துவத்துக்கு, அறிவியலின் சலனமற்ற பகுத்தறிவு அடிப்படை அவசியம்; அதே நேரத்தில் இதமான மனிதப் பண்புகளையும் அது வெளிப்படுத்த வேண்டும்!

## இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

53-வது இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைக்க என்னை அழைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். அதற்காக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சங்கத்தின் தலைமையிடமான சென்னையில் இம் மாநாடு நடைபெறுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நம் நாட்டில் விஞ்ஞான முறையில் மருத்துவம் புரிவது தொடங்கிய காலம் முதல் சென்னையில் பல பிரபல மருத்துவர்களும் அறுவைச் சிகிச்சையாளர்களும் தோன்றி வருகிறார்கள். மருத்துவ அறிவின் வளர்ச்சிக்கும், மனித நோய்களைக் களைவதிலும் இவர்களின் பங்கு, நம் நாட்டின் மருத்துவ வரலாற்றில் பல பக்கங்களை நிரப்பும். டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், டாக்டர் பண்டாலை, டாக்டர் ரங்காச்சாரி, டாக்டர் குருசாமி முதலியார், டாக்டர் கே.எஸ். சஞ்சீவி ஆகியோர் தற்போது என் நினைவில் நிற்கும் மருத்துவத்துறை முன்னணித் தலைவர்கள் ஆவார்கள். மற்றும் பலர் மருத்துவக் கல்வி, நோய்களைக் கண்டறிதல், சிகிச்சை ஆகிய வற்றிற்குப் பலமான ஒரு அடித்தளம் அமைத்திடப் பாடுபட்டுள்ளார்கள்.

எனவே, மருத்துவ விஞ்ஞானம், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் சமுதாயத்தின் நலவாழ்வைப் பேணிக் காப்பதில் சென்னை முன்னணியில் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

கடந்த ஐம்பதாண்டுக் காலத்தில், உலகெங்கும் மருத்துவத் துறையில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பரந்து விரிந்து கொண்டேயிருக்கும் மருத்துவக் கல்வியைக் கிரகித்துக் கொள்வதிலும் நவீன வசதிகளைச் சமுதாயத்தின் ஆரோக்கியத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதிலும், சென்னை மாநகரம் பின்தங்கியதே இல்லை.

மருத்துவத் துறையில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் நமது மாநிலத்திலுள்ள இளைய மருத்துவர்கள் தக்கபடி பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த வளர்ச்சியின் முக்கிய அம்சங்களில் அவர்கள் விரைவாகத் தேர்ச்சி பெற்று அந்த அறிவையும் திறமையையும் நோயாளிகளின் முன்னேற்றத்திற்காக நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். படிப்பதற்கு உள்ள வசதிகள், அறிவுபூர்வமான சூழ்நிலை, ஒருவருடைய தொழிலிலும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு ஆழ்ந்து கவனம் செலுத்தத் தேவையான சூழ்நிலைகளுடன் கூடிய மேற்கத்திய நாடுகளே அவர்களுடைய கவனத்தை முக்கியமாக ஈர்க்கின்றன.

இது, நிச்சயமாக 'திறனாளர் வெளியேற்றத்தில்' முடிகிறது. மேல் படிப்பிற்காக மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற ஆர்வமுள்ள நிறைய இளைஞர்கள், மேலை நாடுகளுக்குச் செல்கின்றனர். ஆனால்திறனாளர்வெளியேற்றத்தால்(Bra in Drain) நன்மைகள்இல்லாமல் இல்லை. நவீன மருத்துவத்தின் தாயகமாக மேற்கத்திய நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் விளங்குகின்றன.

அங்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வெடித்துக் கிளம்பும் அறிவுப் பெருக்கமும், முன்னேற்றங்களும் அற்புதமானவை. பரபரப்பான இக்கல்வி கற்கும் முறையிலும், புதிய திறமைகளில் தேர்ச்சி பெறுவதிலும், அவர்களது அறிவை வளர்த்துக் கொள்வதிலும், இயற்கையாகவே நமது இளைய மருத்துவர்கள் ஆர்வம் காட்டுவது சரியானதே ஆகும். சிலர் அங்கேயே தங்கி விடுவது வருத்தத்திற்குரிய விஷயம் என்றாலும், பெரும்பாலோர் அங்குள்ள வசதியான வாழ்க்கையையும் நல்ல வருமானத்தையும் தியாகம் செய்துவிட்டு தங்களது திறமைகளை நமது மக்களின் நலனுக்காகப் பயன்படுத்திட தாயகம் திரும்புவது மகிழ்ச்சியளிப்பதாகவே உள்ளது. இந்தத் தேசப்பற்றையும் சேவையையும் நாம் அங்கீகரித்தாக வேண்டும். மேற்படிப்பிற்காக மேலும் பல மருத்துவர்கள் மேலை நாடுகளுக்குச் செல்வதைப் பற்றி நான் கவலை கொள்ளவில்லை. இது அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. நான் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தியா போன்றதொரு ஏழை நாடு அதிக பொருட் செலவில் அவர்களின் மருத்துவக் கல்விக்குச் சிறந்த அடிப்படையை வழங்கியுள்ளது. எனவே, அதற்குப் பிரதிபலனாக, அதன் மக்களுக்குச் சேவை புரிய வேண்டும் என எதிர்பார்ப்பது இயற்கையே ஆகும். இந்த எதிர்பார்ப்பினை அவர்கள் பூர்த்தி செய்தாக வேண்டும். ஏனெனில் உடல், மன நோய்களைக் களைவதில் ஒருவருக்கொருவர் உதவிட வேண்டியது அனைத்து மனிதர்களின் தலையாய பொறுப்பாகும்.

அதே நேரத்தில், தனியார் மருத்துவமனைகள் சமீப காலத்தில் அதிகரிப்பதையும், அவற்றின் நவீன வசதிகளையும் வெளிநாட்டிலிருந்து திரும்பிய உயர்ந்த தகுதிபெற்ற மருத்துவர்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் கணக்கெடுத்துப் பார்த்தால், 'திறனாளர் திரும்ப வருவது' (Brain Return) அதிகமாகி உள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது.

கொடைத் தன்மையிலோ, வணிக நோக்கத்துடனோ, தனியார், பொது நிதியிலிருந்து புதிய மருத்துவமனைகள் கட்டப்பட்டு வருகின்றன. நோய்களைக் கண்டறிவதிலும், சிகிச்சையளிப்பதிலும், உதவிட மிக நவீன சாதனங்கள், நிறைய மருத்துவ நிலையங்களில் பயன்படுத்தப் படுகின்றன. இத்தகைய நிலையங்கள் உயர்ந்த தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்களைக் காந்தம் போல் தன்னகத்தே ஈர்த்துக் கொள்கிறது. இது ஒரு விரும்பத்தக்கத் திருப்புமுனையே ஆகும். எனவே, அதை ஊக்கப்படுத்த வேண்டும். மருத்துவத் துறையில் தனியார் முதலீடு செய்திட வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அதை அனைத்து வழிகளிலும் ஊக்குவிக்க விழைகிறேன். மிக நவீன மருத்துவ அறிவும் மருத்துவத் தொழில் நுட்பமும் கொண்டு அனைத்து மக்களின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்தும் தலைசிறந்த மருத்துவ நிலையங்களை நாம் பெற்றாக வேண்டும்.

இந்தத் தலைசிறந்த நிலையங்கள், (Centres of excellence) மிகவும் தேவையான பெருகிவரும் விளைவுகளை (Multiplier effect) ஏற்படுத்தியவுடன், தனித்துவம் பெற்ற பிரிவுகளில் தகுதி



பெற, முன்னேறத் துடிக்கும் இளைய மருத்துவர்களை ஊக்குவிக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

எனினும், பாதிக்கின்ற இரண்டு போக்கு களை (disturbing trends) உங்கள் கவனத் திற்கு நான் கொண்டு வர வேண்டும். ஒன்று, பெரு நகரங்களைச் சுற்றியே வளர்ந்து வரக்கருதும் இத்தகைய மருத்துவ மனைகளின் மனப்பான்மை. உதாரண மாக, சென்னை மாநகரில் இத்தகைய புதிய மருத்துவமனைகள், அதிக அளவில் பெருகிடக் காரணம், இத்தகைய சேவை களின் தேவை அதிகமாய் இருப்பதும், அவற்றுக்கான தொகையை அளிக்க மக்கள் ஆயத்தமாக இருப்பதும் ஆகும்.

தேவை இருப்பதனால் தான் உற்பத்தி பெருகியது என்று சொல்லலாம். ஆனால், இத்தகைய மருத்துவ வசதிகளும் மருத்துவ நிபுணத்துவமும் உற்பத்தி ஆகி இருப்பதாலேயே அதற்கெனத் தனித் தேவை உருவாகியிருக்கிறது என்பதும் அதே அளவு உண்மையே.

ஆனால், ஏழைகள், தேவை உள் ளோர், மருத்துவ சேவைகளுக்கு அதிக செலவு செய்ய இயலாதோர், ஆகி யோரின் நலன்களைப் பேண வேண்டிய அமைப்பு, தேவை - அளிப்பு என்னும் சமன்பாட்டின் அடிப்படையாக அமைய முடியாது. சரிபார்ப்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்க முடியாது. இந்த சேவைகள் தேவைப் படும் இடங்களில் - இத்தகைய சேவை களுக்குப் பணம் தர இயலாதவர்களுக் குக்கூட இத்தகைய சேவைகள் கிடைப் பதை உறுதி செய்யும் பொறுப்பு சமு தாயத்திற்கும் அரசாங்கத்திற்கும் உண்டு.

இந்தச் சேவைகள் நகரங்களில் மட்டும் குவிந்திருப்பது ஏற்றத்தாழ்வுகளை ஏற் படுத்தி உள்ளது. அவை சரிசெய்யப்பட வேண்டும். நமது மாநில அரசு கிராமப் புறங்களிலும், மாவட்ட மருத்துவமனை களிலும், தாலுகா மருத்துவ மனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலை யங்களிலும், மருத்துவ வசதிகளை அதி கரிப்பதன் மூலம் இந்த ஏற்றத் தாழ்வு களை மாற்ற முயற்சி செய்து வருகிறது.

ஆனால், நிதிப்பற்றாக்குறையே நமக்குப் பெரிய தடையாக உள்ளது. மருத்துவ சாதனங்கள் விலை அதிகமாக இருப்பதால் இவைகளை அனைத்து நிலையங்களிலும் நிறுவுவது கடினமாக உள்ளது.

மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள, போட்டி போட்டுக் கொண்டு



முன்வைக்கும் கோரிக்கைகளை மாநில அரசு சந்திக்க வேண்டியுள்ளது. இதில் தேர்ந்தெடுப்பது கடினம். ஆகவே, இங்கே கூடியிருக்கும் பிரபல மருத்துவர் களை, குறிப்பாக புதிய மருத்துவமனை களை நிறுவ உள்ளோர்களை, நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உங்கள் மருத்துவ மனைகளை, தேவைகள் பெருகி வரும் கிராமங்களிலும், புறநகர்ப் பகுதி களிலும் நிறுவுங்கள் என்பதேயாகும். இவை சமுதாயத்திற்கு மிகுந்த பயனை அளிக்கும். அதே நேரத்தில், இத்தகைய போக்கு இளைய மருத்துவர்கள், அவர் களது சேவை மிகவும் தேவைப்படும் சிறிய நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் செல்ல ஊக்கமளிக்கும்.

இரண்டாவதாக நமக்குக் கவலைதரக் கூடியது, மருத்துவச் சேவைகளில் வளர்ந்து வரும் விலைவாசியாகும். இது அரசு மருத்துவ நிறுவனங்களில் ஒரு தீவிரப் பிரச்சினையாகும். எனினும், அரசு வழங்கி வரும் மருத்துவச் சேவை களினால் பெரும்பாலும் ஏழைகள் பயனடைவதால், அரசு மருத்துவத் துறையில், முதலீடு செய்யும் தொகைக்கு ஏற்ப நியாயமான வருமானத்தைப் பெறும் வகையில் ஏழைகளிடமிருந்து பணத்தைப் பெறுவது இயலாத காரிய மாகிவிடுகிறது. அதே நேரத்தில் பல அரசு மருத்துவர்கள் மிகுந்த தகுதிகளைப் பெற்றிருப்பதால், அதற்கு ஈடான சாத னங்களை அவர்களுக்கு வழங்கினால் மட்டுமே அவர்களுடைய சேவையைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்பிரச்சினையைத் தமிழ்நாடு அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்தது. அரசு, தனது நிதி நெருக்கடிகளையும் மீறி மருத்துவமனைகளில் மருத்துவச் சாதனங் களையும் இதர வசதிகளையும் செய்து வருகின்றது.

விலையுயர்ந்த மருத்துவச் சாதனங் களைப் பெறுவதிலும், மருத்துவத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களில் தேர்ச்சி பெறுவதி லும், தனியார் மருத்துவமனைகள் முன் னணியில் உள்ளன என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். அத் தகைய முதலீட்டிற்குத் தகுந்த வருமானத் தைப் பெற்றாக வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்ளும் அதே நேரத்தில், இத்தகைய வசதிகளுக்குப் பணம் செலுத்த இயலாத ஏழைகளுக்கு இச்சலுகைகளை இலவசமாக வழங்க முடியவில்லை என்றாலுங்கூட சலுகை விலையில் வழங்க வேண்டிய சமுதாயக் கடமை அவர்களுக்கு உண்டு என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நான் பல கூட்டங்களில் இக் கருத்தை வலியுறுத்தி வந்துள்ளேன். மருத்துவத் துறை வல்லுநர்கள் இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து, தாமாகவே முன் வந்து, தேவையான இடங்களில் தங்களது வரு மானத்தைத் தியாகம் செய்தாவது ஏழை களுக்கு மதிப்பு வாய்ந்த தங்களது சேவையை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறையில் பெருகி வரும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவர் களின் தார்மீகக் கடமையை நிலைநிறுத்து வது, சேவையின் தரத்தைப் பாது காப்பது பற்றிய வினாக்களை முன் னிறுத்தி உள்ளன.

ஒரு விதத்தில் பார்த்தால் இவ்விரு

பிரச்சினைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அவை தனியார் மருத்துவமனைகள் நிறுவப்பட்டதன் நோக்கத்துடனும், குறிக்கோளுடனும், இலட்சியத்துடனும் தொடர்புடைய தாகும். அங்கு பணிபுரியும் மருத்துவர்கள் மருத்துவமனைக்காக உழைக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவர்கள் நோயாளிகளுக்காகவும், பணிபுரிகிறார்கள்; அவர்கள் சமுதாயத்திற்காகப் பணி புரிகிறார்கள். விரைவாகவும் குறைந்த செலவிலும் நோயாளிகள் நோயைக் கண்டறிந்து சிகிச்சை பெற்றிட உதவிடும் வகையில் அவர்களது திறமையைப் பயன்படுத்திட வேண்டும். தேவையற்ற வைகளும் அனைத்து வகையில் வீணாவதும் தவிர்க்கப்பட வேண்டும். நோயாளிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு தருவது மட்டுமே கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். தனியார் மருத்துவ மனைகளின் தரத்தைப் பேணும் பிரச் சினையை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து பிரபல மருத்துவர்களின் ஆலோ சனையைக் கேட்க அரசு விரும்புகிறது. பல் வேறு மருத்துவமனைகளின் சீரான தரத்தை நிலைநிறுத்தவும், போட்டிகளைத் தவிர்க் கவும், வீணாவதைக் குறைக்கவும், நோயாளிகளைப் பாதுகாப்பதில் ஆகும் செலவைக் குறைக்கவும் உதவும் வகையில் அமைப்பு ஒன்றை அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் சங்கம் நிறுவிட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

இது சில பெரிய பிரச்சினை களுக்கு என்னை இட்டுச் செல்கிறது. உடற்கூற்றியல், நோய்த் தடுப்பியல், உயிர்ப் பொறியியல், மருத்துவத் தொழில்நுட்பம், புதிய மரபியல் (Physiology, Immunology, Bio-engineering medical technology, New Genetics) மற்றும் மருத்துவத்துறையின் இதரப் பிரிவுகளில் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பிரமிக்கத்தக்கவை. இந்த முன்னேற்றங்கள் மேலை நாட்டு மக் களின் உடல் ஆரோக்கியத்திற்கும், அதிக ஆயுளுக்கும் தம் பங்கை ஆற்றியுள்ளன. அதன் பலன்கள் இப்போது வளர்ந்து வரும் நாடுகளுக்கும் பரவி வருகின்றன. அறுவைச் சிகிச்சைத் துறையில் ஏற்பட் டுள்ள பரபரப்பான முன்னேற்றங்கள் அறுவைச் சிகிச்சையைச் சுலபமாக்கி, நோயாளிகளுக்கு நல்ல சுகத்தையும் குறைந்தபட்ச அபாயத்தையும் தரும் அறுவைத் தொழில் நுணுக்கங்களையும் வழங்கியுள்ளது.

அறுவைச் சிகிச்சைத் துறையின் முன்னேற்றத்தில் மயக்க மருந்தியலின் வளர்ச்சியும் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. ஆனால் இந்த வளர்ச்சிகள் தார்மீக, சட்டபூர்வ பிரச்சினைகளை உரு வாக்குகின்றன. மேலை நாட்டு மருத்துவ நிபுணர்கள் இப்பிரச்சினையைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து வருகிறார்கள். இப்பிரச்சினைகள்ப் பொறுத்த வரையில் நாம் நல்ல நிலையில் இருக்கின்றோம். உயிர்ப் பொறியியல், மரபியல் பொறியியல், உறுப்பு மாற்றம், (Bio-engineering), (Genetic engineering), (Transplantation) ஆகியவற்றின் காரண மாக மேற்கத்திய நாடுகளில் காணப்படும் தர்ம சங்கடமான சூழ்நிலையை நாம் சந்திக்கவில்லை.

நமது பிரச்சினை வித்தியாசமானது. நம் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் ஏராளமான மக்களுக்கு நல்வாழ்வும் மருத்துவச் சேவையும் அளிப்பதே நம் பிரச்சினையாகும். நாம் இப்பிரச்சி னையைச் சிகிச்சையளிக்கும் முயற்சியாகக் கருதாமல் நோய்த்தடுப்பு முயற்சியாக கருதவேண்டும். இந்தியாவைப் போன்ற நாடுகளில், சத்துணவு இல்லாமையும், சுகாதாரமற்ற சுற்றுப்புறச் சூழ்நிலையும் நோயில் முடிகின்றன. சுகாதாரப் பிரச் சினை என்பது பெரும்பாலும், சுத்தமான குடிநீர், சுற்றுப்புறங்களைத் தூய்மையாக் வைத்திருத்தல் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதலே ஆகும். மேலும் இது கல்வியை வழங்கும் பிரச்சினை யாகும். கல்வியினால், சுகாதாரம், தூய்மை ஆகியவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பெற்றோர்களும், குழந்தைகளும் கற்று, குறைந்த செலவில் பல நோய்களைத் தவிர்க்கலாம். உதாரணமாக, தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதும், முற்றிலும் ஒழிப் பதும், மக்களின் சுகாதாரத்தைப் பேணிக் காப்பதில் முக்கிய பங்காற்றும்.

எனவே, இந்தியா போன்றதொரு நாட்டில், வருமானம் வளர்ப்பதையும், வறுமையை ஒழிப்பதையும் துரிதப் படுத்தும் கொள்கைகள், மக்கள் சுகாதார மான சூழ்நிலைகளையும், சுகாதாரப் பாது காப்பையும், பெற்று நலமாக வாழ வழி செய்கின்றன.

கல்வி கற்கும் சந்தர்ப்பங்களை - குறிப் பாக மகளிர் கல்விக்கான சந்தர்ப்பங்களைப் பெருக்கும் கொள்கைகள், மக்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொண்டு, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுகின்றன. இது போன்றே, சிறந்த மற்றும் அனைவரும் அடையக்கூடிய அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்க உதவிபுரியும்

## அட்டை சொல்லும் செய்தி

### மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அகில இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் சிறப்பு உறுப்பினர் தகுதி

இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்கத்தின் 53-வது மாநாடு, 27.12.93 அன்று, சென்னையில் நடைபெற்றபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, சங்கத்தின் கவுரவ உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

மருத்துவத்துறை சாராத ஒருவர்க்கு இந்த மாபெரும் தகுதி வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்கைகள், சமுதாயத்தின் நல வாழ்விற்குப் பெருமளவில் பயனளிக்கின்றன. இந்தக் கொள்கைகள் அனைத்தும் ஒன்றுசேரும் போது, அவை நல வாழ்வை மேம்படுத்தி ஏழ்மையைக் குறைத்து ஒன்றையொன்று உறுதிப்படுத்தும் நல வளையத்தை உருவாக்குகின்றன.

தமிழ்நாட்டில் என் மிகப்பெரிய கவனம் குழந்தைகள் மீதுதான் உள்ளது. குழந்தையின் உடல், நலச் சக்திகளை வளர்ப்பதன் மூலம் - சுற்றுச் சூழ்நிலைத் தடைகளைக் குறைப்பதன் மூலம் - வளமான சுகாதார சூழ்நிலையை வளர்ப்பதன் மூலம் - குழந்தையின் தகுந்த முன்னேற்றத்திற்கு உறுதியான, திடமான அடிப்படையை நாம் வழங்க விரும்புகிறோம். குழந்தையைப் பேணுவதில் தமிழ்நாடு மிகச் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளது. ஆனால் நாம் ஏற்கெனவே சாதித்திருப்பதில் நாம் திருப்தியடையவில்லை. இப்பிரச்சினையை நான் விரிவாக அலசியுள்ளேன். யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக 15 அம்சத் திட்டம் ஒன்றை உருவாக்கி, சில வாரங்களுக்கு முன் அதைத் தொடக்கி வைத்தேன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இதைச் சரியாக அமல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் சீராக வளர்வதற்குச் சிறந்த சந்தர்ப்பங்களை வழங்குவதற்குத் தமிழக அரசு முனைகிறது.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், சில அடிப்படைப் பொதுச் சுகாதார வசதிகளை வழங்குவதற்காக வகுக்கப்பட்ட நல வாழ்வுக் கொள்கைகள் பெருமளவில் சாதிக்க முடியும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்கே ஆகும். பல நோய்களை இவற்றால் தடுக்கவும் முடியும். குழந்தைகளிடையே சிறந்த ஆரோக்கியத்தையும், நோய்களை எதிர்க்கும் சக்தியையும் உறுதி செய்யும். எதிர்வரும் மாதங்களில் இத்திட்டத்திற்குத் தமிழக அரசு மிகப் பெரிய முக்கியத்துவத்தை அளிக்கும்.

நோய்களைக் குணப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய துறைகளைத் தேர்ந்தெடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகிறோம். சிகிச்சைக்குத் தேவையான வசதிகளை இதனால் வழங்க முடியும்.

1992-ஆம் ஆண்டு நமது அரசு அனைவருக்கும் இலவசச் சிகிச்சை முகாம்களை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது. கிராமப் புறங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் சிகிச்சை வசதிகளை அளிப்பதில் நாம் குறிப்பிடத்தக்க பலன்களை அடைந்துள்ளோம். இந்த முயற்சிகளால், மக்களுடைய ஆரோக்கியத்தைப் பற்றியும், நோய்களைப் பற்றியும் மருத்துவச் சிகிச்சைகள் வழங்குவதில் உள்ள இடைவெளிகள் பற்றியும் குறிப்பிட்ட குறியீடுகளை நிர்ணயிப்பதற்கும் அதைக் குறுகிய காலத்தில் அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நம்மால் முடிந்திருக்கிறது.

நமது திட்டங்களில், சுகாதாரத்தைப் பேணுதல் என்பதை, ஒரு தொழிலாகக் கருதுவதற்கும், ஒரு தொண்டாகக் கருதுவதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் கவனமாக உணர்ந்து கடைப்பிடித்து வருகிறோம்.

இன்றைய சூழ்நிலையில், சுகாதாரம் பேணுதல் என்னும் கோட்பாடு அகில உலக அரங்கில், ஒரு தொழிலாகவே கருதப்படுகிறது. ஓரளவு, சுகாதார மேம்பாட்டின் உண்மையான குறிக்கோளை இது பாதித்துவிட்டது. சுகாதாரத்தைப் பாதுகாப்பது ஒரு தொழிலாகக் கருதும் போது, அறிவு, தொழில்நுட்பச் சக்தியினை மருத்துவ நிபுணர்களின் கரங்களிலே தந்துவிடுகின்றது. ஆனால், அளவுக்கதிகமான சக்தியென்பது தன்



## இப்புத்தாண்டு அனைத்து முயற்சிகளிலும் வெற்றி அடையத்துணை நிற்கும்!

### மாண்புமிகு முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி

**மலர்கின்ற புத்தாண்டு தமிழகத்தில் உள்ள மக்களின் மனதில் மகிழ்ச்சியையும், அவர்தம் இல்லங்களில் வளங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் என்ற எனது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி, இவ்வினிய புத்தாண்டினை அக மகிழ்ந்து கொண்டாடும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இயற்கை அன்னையின் அருளால் நீர்வளமும், அதனால் அனைத்து வளங்களும் பெருகியுள்ள மகிழ்ச்சியான சூழ்நிலையில் தொடங்குகின்ற இப்புத்தாண்டு, நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி அடையத்துணை நிற்கும் என்று நம்புகிறேன்.**

**தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும், தொய்வில்லாத முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற இலக்கை நோக்கி நாம் மேற்கொண்டுள்ள பயணத்திற்குத் தேவையான ஆற்றலையும், நெஞ்சுரத்தையும் இந்தப் புத்தாண்டு வழங்கவேண்டுமென்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் எனது உள்ளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

னுடனே மிகுந்த அபாயத்தைக் கொண்டிருக்கிறது.

மனித வாழ்க்கைக்கான பொறுப்பை இழந்துவிடுவதுடன் தார்மீக நிலைகள் கீழிறங்கும் அபாயமும் உள்ளது. சக மனிதர்களுக்குத் தொண்டு புரிவதே தன்னுடைய முதல் குறிக்கோள் என்பதைக் கொண்டிருக்க வேண்டிய மருத்துவர்கள் அதை இழக்கும் அபாயமும் உள்ளது. தம் தேவைகளையெல்லாம் மிகவும் மீறி, வருமானத்திற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கும்போது, மருத்துவர் தன்னுடைய தொழிலுக்குரிய கண்ணியத்தை இழக்கின்றார்.

மருத்துவம் என்பது குணப்படுத்தும் ஒரு கலையாகும். மருத்துவச் சிகிச்சை என்பது, ஒரு மருத்துவருக்கும் நோயாளிக்கும் உள்ள தனிப்பட்ட தொடர்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு மருத்துவர் மனித உயிரை ஒரு பொருளாக மட்டுமே கருதி, தன்னை ஒரு தொழில்நுட்ப நிபுணராகக் கருதும் போது, மருத்துவ விஞ்ஞானத்தின் உண்மையான பொருள் காணாமல் போய்விடுகிறது.

விஞ்ஞானத்தின் சலனமற்ற, பகுத்தறிவின் அடிப்படை, மருத்துவத்துக்கு நிச்சயம் தேவை. ஆனால் அதே நேரத்தில் இதமான பண்புகளையும் வெளிப்படுத்த வேண்டும்.

டாக்டர் அர்னால்டு டாயின்பி கூறினார்: ''எந்த மனிதனின் உயிரையும் அகமுகமாகப் பார்க்க வேண்டும். மக்களிடையே ஆத்மார்த்தமான தொடர்புகளை மதிக்கின்ற மனோபாவம் இருக்க வேண்டும்''.

மருத்துவ முன்னேற்றங்கள் நம்மை விந்தைக்குள்ளாக்கும் அதே நேரத்தில், மேலைநாட்டு நிபுணர்கள் கூட, கிழக்கத்திய ஞானத்தின் அடிப்படையில் ஒரு முழுமையான பார்வையோடு சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். பெருவாரியான மருத்துவப் பிரச்சினைகளை அணுக வேண்டியிருப்பதால், வருங்கால மருத்துவம், மரபுவழி மருத்துவத்துவத்தின் பயன்பாட்டை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அவர்கள் மேன்மேலும் உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

பிரிட் ஜாப் கேப்ரா கூறுவது போல் ''நோய்களின் உயிரியற் கூறுகள் பற்றிய ஆய்வில் மருத்துவ விஞ்ஞானம் நிகரற்று விளங்குகிறது. அந்த ஆய்வை, அது விட்டுவிட வேண்டுமென்ற அவசியம் ஏதுமில்லை. ஆனால் மனிதர்களின் புறத்தோற்றவியல், உடற்கூற்றியல் நிலையுடன் இணைத்து, மனிதனின் இயற்கை மற்றும் சமூகச் சூழலில், நோய்களின் உயிரியல் ஆய்வை அது மேற்கொள்ள வேண்டும்''.

> **மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.**
>
> **—திருவள்ளுவர்**

எனவே ஆயுர்வேதம், சித்த, யுனானி போன்ற கிழக்கத்திய மருத்துவங்களை அறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவற்றின் அடிப்படைகளைச் சிறப்பாகப் புரிந்து கொள்வதன் மூலம், நோய்களைத் தடுப்பதிலும், சிகிச்சை அளிப்பதிலும் அவற்றின் உதவிகளைக் குறைந்த செலவில் ஒருங்கிணைக்கலாம்.

இந்த யோசனை மேற்கத்திய கல்வியாளர்களை ஏற்கெனவே கவர்ந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொண்டாக வேண்டும். உதாரணமாக, முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது மனம்-உடல் ஆகியவற்றிற்கும் நோய்க்கும் உள்ள தொடர்பு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மனம்-உடல் ஆகியவற்றிற்கும் நோய்-சுகாதாரம் ஆகியவற்றிற்கும் தொடர்பு உண்டு என்பதைப் பெரும்பாலான நிபுணர்கள் ஏற்றுள்ளார்கள்.

இந்தியாவின் 'பிராணா' மற்றும் சீனாவின் 'சீ''ஐ' ஆகிய தத்துவங்கள், நுட்பமான சக்திகளைக் குறிக்கும் மரபு வழிச்சொற்றொடர்களாகும். இவைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளே நோயை உற்பத்தி செய்கின்றன. கிழக்கத்திய ஞானம் தனிநபரை, இடம்-காலம் இவற்றுக்கு உட்பட்ட ஓர் உயிரற்ற பொருளாகவோ சடமாகவோ கருதுவதில்லை; சக்தியில் தொடர்ந்து ஏற்படும் மாற்றங்களாகவே மனிதனைக் கருதுகிறது. பிரபல சிந்தனையாளர்கள், நோயாளியை, ஒரு முழுமையான தனிமனிதனாகக் கருதவேண்டிய அவசியத்தை உணரத் தொடங்கியுள்ளனர். அந்த நோயாளியின் பிரச்சினைகள், அவரின் உடல் உறுப்புக்கள் பற்றிய பிரச்சினை அன்று; ஒட்டு மொத்தமாகக் கருதிக் கையாளப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

இந்தத் தொடக்க கருத்தரங்கில், இவை, நான் குறிப்பிட விரும்புகின்ற சில கருத்துக்களாகும். சில பிரச்சினைகளைப் பற்றி நான் வெளிப்படுத்தியுள்ள அக்கறை உங்களது பரிசீலனைக்கு உகந்தது என்றே நான் கருதுகிறேன். மருத்துவத் துறையின் மைய இலட்சியமாகப் பெருந்தன்மை இருக்க வேண்டும். தம் தனிப்பட்ட உதாரணத்தின் மூலம் மற்றவர்களை ஊக்கப்படுத்தும் மருத்துவர்கள், நோயாளியின் உலகத்தை, அவர்களது அணுகுமுறையை, அவர்களது வெளிப்பார்வையை மாற்ற இயலும். மருந்துகளைக் குறித்துக் கொடுப்பது மட்டும் மருத்துவரின் பணியல்ல. நோயாளியைக் குணப்படுத்துவது மருத்துவரின் பணியாகும். அது அத்துடன் நின்று விடுவதில்லை. ''குணமடைவது மட்டுமே குறிக்கோள் அல்ல. அதைவிட முக்கியமானது பயமின்றி வாழவும், வாழ்விலும்- இறுதியாகச் சாவிலும் நிம்மதியாக இருக்கக் கற்றுக் கொள்வதுமேயாகும். மருத்துவர் தனது சொந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு தன் மனத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதே இதன் பொருளாகும்.

மாபெரும் மனத்தத்துவ நிபுணர் கார்ல் யங், கூறுகிறார்:

''மற்றவர்களின் துன்பங்களைப் போக்குவதன் மூலம் தன் சொந்தத் துன்பங்களிலிருந்து மருத்துவர் இனிமேல் விடுபட இயலாது. சீழ்வடியும் புண்ணால் துன்புற்றுக் கொண்டிருக்கக் கூடிய ஒரு மனிதன், அறுவைச் சிகிச்சையை நடத்தத் தகுதியில்லாதவன் என்பதை அவர் உணர்வார்''.

இந்தப் புண் உள்ளேயும் இருக்கலாம். வெளியேயும் இருக்கலாம். சமுதாயத்திற்குச் சேவை புரியத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் 'சமுதாயத்தின் தலைவர் என்ற முறையில் உங்கள் தகுதியை நீங்கள் எடை போட வேண்டும் என்றும் உங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு நீங்கள் அர்ப்பணித்துக் கொள்கின்ற துறை எதுவாயினும் உங்களது தனிச் சிறப்பு, தொழிலில் நீங்கள் பெற்றிருக்கும் நிபுணத்துவம், உங்களது சாதனைகள் ஆகியவற்றைப் பற்றி எண்ணாமல் மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு நீங்கள் விளங்க வேண்டும். அப்போது ஒவ்வொரு மருத்துவமனையும் சுகமளிக்கும் திருக்கோயி

லாகும், ஒவ்வொரு மருத்துவரும், ஒவ்வொரு அறுவைச் சிகிச்சை நிபுணரும் உண்மையான நோய் தீர்ப்பாளராகவும், மகிழ்ச்சியைப் பரப்புபவராகவும் இருப்பார்.

என் பேச்சை முடிப்பதற்கு முன்னால் இந்தச் சங்கத்தின் கௌரவ உறுப்பினராக என்னை நியமித்துப் பெருமைப் படுத்தியமைக்கு அகில இந்திய அறுவைச் சிகிச்சை மருத்துவச் சங்கத்தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களது தாராள மனப்பான்மையை நான் மிகவும் பாராட்டுகிறேன்; மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். மனித குலத்தின் மேன்மைக்காக நீங்கள் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பிரம்மாண்டமான சேவைக்காக, மருத்துவத் தொழிலுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயம் நம் சமூகத் தேவைகளின் அடிப்படையில், மருத்துவத் துறையின் பங்கைத் தெளிவுபடுத்தவும் உங்களின் பரிசீலனைக்காகவும், சில வழக்கத்துக்கு மாறான கருத்துக்களை வழங்கியிருக்கிறேன். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையிலும், தனி நபர் என்ற முறையிலும் மருத்துவத் தொழிலுக்கு என்னுடைய பங்கைத்தொடர்ந்து செலுத்திக் கொண்டேயிருப்பேன். அப்போதுதான், நீங்கள் உங்கள் சிறந்த சேவையை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிக்க முடியும்.

குத்தகைக் காலத்தை மேலும் முப்பது ஆண்டு காலத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்ற உங்களின் கோரிக்கையை நான் அறிவேன்.

உங்களின் கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அதன்படியே, அரசு ஆணைகள் வழங்கப்படும்.

குத்தகைத் தொகையை, நியாயமான அளவில் நிர்ணயிக்க வேண்டுமெனும் உங்களது கோரிக்கையை அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும்.

நீங்கள் நிதி நெருக்கடியில் இருப்பதாக நான் அறிகிறேன். நாடெங்கிலும் நல்ல செல்வாக்குள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் இப்படி இது போன்ற கஷ்டங்களில் இருந்திருக்கக் கூடாது. எனினும், உங்களது நிதி நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கத்திலிருந்து ரூ.5 இலட்சத்தை நன்கொடையாக வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மாநாடு வெற்றியடைய வாழ்த்துகிறேன். உங்கள் விவாதங்கள் பயனுள்ளவையாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

நன்றி!

## திருப்பூர் திருப்புமுனை

**திருப்பூர் என்றதும் கொடி காத்த குமரனும், கொடி கட்டிப் பறக்கும் பின்னலாடைத் (நிட்வேர்) தொழிலும் சட்டென்று நினைவுக்கு வரும். 1993-ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் திருப்பூர் பின்னலாடைத் தொழில் ஒரு பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த ஆறு மாதங்களில் மட்டுமே ரூ.823.54 கோடிக்கு இங்கிருந்து பருத்திப் பின்னலாடைகள் ஏற்றுமதியாகியுள்ளன!**

**1992-ஆம் ஆண்டு முழுவதிற்கும் 773 கோடி ரூபாய்க்குத்தான் ஏற்றுமதியாகியது. பத்தாண்டுகளுக்கு முன்பு, 1983-இல், இங்கிருந்து ரூ.13 கோடிக்குத்தான் ஏற்றுமதி நடந்தது. நேரடி ஏற்றுமதி தவிர, சென்னை, பம்பாய், தில்லியிலிருந்து மேலும் ரூ.400 - ரூ.500 கோடி மதிப்பிற்கு திருப்பூர் பின்னலாடைகள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றன.**

**குறைந்த ஆதாரங்கள், வசதிகள், மற்றும் பழமையான வழிமுறைகளைக் கொண்டிருந்தாலும், பெருஞ் சாதனை புரிந்துள்ளது திருப்பூர் பின்னலாடைத்துறை!**

## மண்ணுக்கு மேலே...

**கருங்கற்கள் நமக்கு ஈட்டித் தந்த அன்னியச் செலாவணி 374 கோடி ரூபாய் (1991-92) என்றால் விந்தையாக இருக்கிறதல்லவா!**

தமிழகம் உட்பட ஏழு மாநிலங்களின் சில பகுதிகளில் மட்டுமே 130 மில்லியன் கன மீட்டர் கருங்கல் வளம் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கர்நாடகம் (55.7 மி.கன மீட்டர்) முதலிடம் வகிக்கிறது. அடுத்ததாக அசாம் (43.5 மி.கன மீட்டர்), பீகார் (19 மி.கன மீட்டர்) என்ற வரிசையில் தமிழகம் ஆறாவதாக வருகிறது (1.7 மி.கன மீட்டர்).

1991-92-இல் 7.15 இலட்சம் டன் கிரானைட் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.374 கோடி, ஜப்பான் (35 சதவிகிதம்), இத்தாலி (20 சதவிகிதம்), அமெரிக்கா (12 சதவிகிதம்) முதலான நாடுகள் இதனை நம்மிடமிருந்து வாங்குகின்றன. 100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் 150 நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், வட ஆர்க்காடு, தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களில் கருமை நிறக் கருங்கல்லும், கிருஷ்ணகிரி பகுதிகளில் சாம்பல் நிறக்கல்லும், தென்னார்க்காடு, கோவை, மதுரை, நெல்லை மாவட்டங்களில் இளஞ் சிவப்பு, சாம்பல் வண்ணக் கற்களும் கிடைக்கின்றன.

இந்தக் கருப்புத் தங்கத்தின் வளம் குறித்து இந்தியச் சுரங்க அமைவகம் விரிவான பட்டியலைத் தயாரித்து வருகிறது.



# மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்

## மாண்புமிகு முதல்வர் ஆணை

**த**மிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களில் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, குறிப்பாக மகளிரின் கல்வி நிலை மிகவும் குறைவாக உள்ள மாவட்டங்களில் தொடக்கக் கல்வி முதல் அனைத்து நிலைகளிலும் கல்வியின் தரம் மேம்பாடு அடைய திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றும், அதனை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்றும், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கருத்திற்கு ஏற்ப, தமிழகக் கல்வித் துறை ஒரு புதிய கல்வித் திட்டத்தை வகுத்தது. அதனைப் பரிசீலனை செய்து, ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான திருவண்ணாமலை-சம்புவராயர், தென்னார்க்காடு-வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்காக, 120 கோடி ரூபாய் மதிப்பில் உலக வங்கியின் நிதி உதவியோடு கூடிய 'மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்' என்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, இந்த நான்கு மாவட்டங்களில் நிலவி வரும் தொடக்கக் கல்வியில் தரம் வெகுவாக மேம்படுத்தப்படும். கல்வி நிலையங்களில் உள்ள கட்டட மற்றும் கருவி வசதிகள், மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம், மாணவர்களின் சேர்க்கை மற்றும் மாணவர்கள் பள்ளிகளிலிருந்து நின்று விடுதல் ஆகிய முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தப்பட்டு, இவைகளில் நிலவி வரும் குறைகள் நீக்கப்பட்டு, தொடக்கக் கல்வியின் தரம் முற்றிலும் உயர்த்தப்பட்டு, அதன் மூலமாக இம்மாவட்டங்களின் மக்களிடையே எழுத்தறிவும் கல்வியும் உயர இத்திட்டம் வழிவகுக்கும்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அமல் படுத்தப்படும் இந்தப் புதிய திட்டத்தில் 24 சதவிகித நிதி, ஆரம்பப் பள்ளிகளில் உள்ள பள்ளிக் கட்டடம், குடிநீர் வசதி, மின்சார வசதி ஆகியவைகளின் மேம்பாட்டிற்காகவும், 6 சதவிகித நிதி தொடக்கப் பள்ளிகளில், நிர்வாக மற்றும் மேலாண்மை மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படும். எஞ்சியுள்ள 70 சதவிகித நிதி, துணை பள்ளிக் கல்வி அலுவலர்கள் ஆகியோரின் திறனை உயர்த்தவதற்குத் தேவையான பயிற்சிக்காகவும், தொடக்கக் கல்வி புத்தகங்கள் மற்றும் பாடத் திட்டத்தின் மேம்பாட்டிற்காகவும், பயன்படுத்தப்படும். மேலும், இப்பள்ளிகளில் பயின்று வரும் பெண் குழந்தைகளின் நலனுக்காகக் கழிப்பிட வசதிகள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவியருக்குச் சிறப்புப் பயிற்சி மற்றும் ஆசிரியர்கள் - தாய்மார்கள் கழகங்கள் ஆகியவை அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் எஞ்சியுள்ள நிதியினைக் கொண்டு தொடங்கப்படும்.

உலக வங்கியின் உதவியோடு கூடிய இந்தத் திட்டமானது, ஜூன் மாதம் 1994-ஆம் ஆண்டு முதல் தொடங்கி அடுத்த ஐந்து ஆண்டுகளில் முடிவுறும். திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு 39.48 கோடி ரூபாயும், தென்னார்க்காடு-வள்ளலார் மற்றும் விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களுக்கு 44.94 கோடி ரூபாயும், தர்மபுரி மாவட்டத்திற்கு 36.33 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 120 கோடி ரூபாய் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தொடக்கப்பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில், ''தமிழ்நாடு மாநில அனைவருக்கும் கல்வி வழங்கும் இயக்கம்' என்ற புதியதொரு அமைப்பு தமிழக அரசால் நிறுவப்படும்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பில் மத்திய மாநில அரசுகளின் கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள், பொதுநல அமைப்புகள், மகளிர் இயக்கங்கள் மற்றும் 'யூனிசெப்' போன்றவற்றின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்து, ஆலோசனை வழங்குவார்கள்.

இந்தத் திட்டத்தினை அடுத்த ஆண்டு (1994) செயல்படுத்த ஏதுவாக, அதற்கு முழு வடிவம் கொடுப்பதற்காக, உலக வங்கியின் குழு இவ்வாண்டு (1993) டிசம்பர் மாதம் தமிழ்நாட்டிற்கு வருகை புரிய உள்ளது.

பெரியார் மாவட்டம்:



# ஊர் நலம் ஓங்கிட...

பெரியார் மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் - கீழ் 1993-94-ஆம் ஆண்டிற்கு, 9,759 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க ரூ.403 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் இலக்கை மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளுக்குப் பிரித்து கொடுத்து செயற்படைக் குழுக்கள் மூலம் பயனாளிகள் தேர்வு செய்து, கடன் மனுக்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப் பட்டு வருகிறது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், 'இ.ஆ.ப.', அவர்கள் கோபி தொகுதியில் உள்ள பாரியர் கிராமத்தில் தொகுப்பு வீடுகளைத் திறந்து வைத்துப் பேசும்போது கூறினார்.

இம்மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 758 தொகுப்பு வீடுகள் அமைப்பதற்காக ரூ.102 இலட்சமும், 76 ஜீவன் தாரா கிணறுகள் தோண்டுவதற்காக ரூ.32 இலட்சமும், பாசன மேம்பாட்டிற்காக 11 சிறு பாசனக் குளங்கள் அமைக்க ரூ.5.5 இலட்சமும், 15 புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைத்திட ரூ.22.5 இலட்சமும், 55 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டட ரூ.66 இலட்சமும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு மையக் கட்டடங்கள் அமைக்க ரூ.3.5 இலட்சமும், இரண்டு பல நோக்கு சமுதாயக் கூடங்க கட்டட ரூ.6 இலட்சமும், விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்க ரூ.5 இலட்சமும், 450 எக்டேரில் சமூகக் காடுகள் வளர்க்கும் பணிக்காக ரூ.27.5 இலட்சமும், கப்பிச் சாலைகள் 205 கி.மீட்டருக்கு அமைக்க ரூ.190 இலட்சமும், 724 ஊராட்சிப் பணிகளை முடிக்க ரூ.1.63 இலட்சமும், ஊராட்சிகளின் சொத்துக்களைப் பராமரிக்க ரூ.38 இலட்சமும், மொத்தம் 660 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், இம் மாவட்டத்திற்கு கூடுதல் நிதி ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தொகையின் மூலம் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் செயலாக்கத்தின் பொருட்டு 500 முதல் 1000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களின் சாலை வசதிக்காக ரூ.41 இலட்சமும், கூடுதல் பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ.10 இலட்சமும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையக் கட்டடங்கள் அமைக்க ரூ.30 ஆயிரமும், திருக்கோயில் குளங்கள் மேம்பாடு செய்யும் பணிகளுக்காக ரூ.6 இலட்சமும், ஊராட்சி மன்ற கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.63 இலட்சமும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதில் ரூ.45 இலட்சம் செலவிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு 1000 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு இதுவரை 220 கலன்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் (டிரைசம்) 1993-94-ஆம் ஆண்டிற்குப் பொருளியல் குறியீடு 924 ஆகவும், நிதி ஒதுக்கீடு ரூ.29.41 இலட்சமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக ஆகஸ்ட் முதல் 555 இளைஞர்களுக்குப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பல்வேறு பிரிவினருக்கும் வேலைவாய்ப்பு கொடுப்பதுடன், குறிப்பாக கிராம மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்பட்டு வருகிறது என்றால் அது மிகையல்ல!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில், திருக்கோவில் நிர்வாக வாரியக் கூட்டம்

தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியத்தின் கூட்டம் 21.10.1993 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு டி.வி. நடேசன் பால்ராஜ், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன், திரு சந்தானம், திரு பராசரன், திரு பா. சிவந்தி ஆதித்தன், தொண்டை மண்டல ஆதீனகர்த்தராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், காஞ்சீபுரம் திரு அல்லூர் வில்வநாத சிவாச்சாரியார், திரு அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார், தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், வணிக வரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திரு பி.வி. ராஜாராமன், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு ராமகிருஷ்ணன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. பல்வேறு பொருள்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, முடிவுகள் எடுக்கப்பட்டன. திருக்கோவில்கள் புனரமைப்பு, திருக்கோவில்கள் நிர்வாகம், ஒருகாலப் பூசைக்கான நிதிகளை ஏற்பாடு செய்வது போன்றவை விவாதிக்கப்பட்டன.

## மனுநீதி நாள்:

சோழ மண்டலத்தை ஆண்ட மனுநீதிச் சோழன் பசுவின் கன்றைத் தன்னுடைய ஒரே மகன் தான் கொன்றான் என்பதை அக்கன்றின் தாய் மூலம் அறிய வந்ததும், தன்னுடைய ஒரே மகன் என்று கூடப் பாராமல், மகனைத் தேர்க்காலில் வைத்துக் கொல்லுமாறு நீதி வழங்கினான். மனுநீதிச் சோழன் நீதியைப் பறைசாற்றிப் போற்றிடும் வகையில் 1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் அரசு 'மனுநீதித் திட்டம்' என்றொரு திட்டத்தை ஏற்படுத்தியது.

மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட வருவாய் அலுவலரும் மாதம் ஒருமுறை மக்களிடத்தில் நேரடியாகக் கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு அவர்கள் குறைந்த நாட்களுக்குள் அவர்கள் கொடுத்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படும்.

கிராமங்களில் வாழுகின்ற ஏழை எளிய மக்கள் மற்றும்நடுத்தர வர்க்கத்தினரின் துயர் துடைத்திடக் கருதி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் செல்லும் மாவட்டங்களில் மனுநீதி நாள் கூட்டம் நடத்தி மக்களின் குறைகளை நேரில் கேட்டுத் தீர்வு காணுதல் வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

மனுநீதி நாளின் முக்கியத் துவத்தைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி தன் மூலம் பெறப்படும் மனுக்களைப் பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்ள, தலைமைச் செயலகத்தில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையில் ஒரு தனிப் பிரிவையே அமைத்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஏழை, எளியோரின் விண்ணப்பங்களுக்கு முடிந்த அளவு நல்ல தீர்வு காண அந்தந்தத் துறைச் செயலருக்கு அனுப்பியும், மாவட்டங்களில் அனுப்பி வைக்கப்படுகிறது.

மக்களின் குறைகளைத் தீர்த்திடுதல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் நிர்வாகத்தில் தான், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் துணை ஆட்சியர் தகுதியில் ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டு அம் மாவட்ட மக்கள் கொடுக்கும் மனுக்கள் மீதும், முதல்வரிடம் கொடுக்கப் பட்ட மனுக்கள் மீதும், உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பெரியார் மாவட்டத்தில் மாண்புமிகு

உணவு அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்கள், மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வர மூர்த்தி அவர்கள் மற்றும் சிறு சேமிப்பு ஆலோசனைக்குழு துணைத் தலைவர் திரு வி.கே. சின்னசாமி அவர்கள் ஈரோடு, சித்தோடு, பெருந்துறை, ஊத்துக்குளி, குன்னத்தூர், கோபி, பவானி, தாராபுரம், வெள்ளக்கோயில், வெள்ளோடு, காங்கயம், சென்னிமலை, ஊதியூர் மற்றும் நம்பியூர் பகுதிகளில் இது வரை 20-க்கும் மேற்பட்ட மனுநீதி நாள் கூட்டங்களை நடத்தி சுமார் 10,000 மனுக்கள் பெற்று அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் புதிதாகப் பதவி ஏற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ்.பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் மனுநீதி நாளின் முக்கியத்துவத்தை அறிந்து மாவட்ட அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தினார். அப்பொழுது அவர் கூறியதாவது:

''மக்கள் குறை கேட்கும் நாள் கூட்டங்களில் ஏற்படும் மனுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பாக திங்கட்கிழமைதோறும் பெறப்படும் மனுக்களை முன்னுரிமை அளித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டும்'' என்றார். அதற்குரிய நடவடிக்கைகள் ஒரு வாரக் காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை அந்தத் துறை அலுவலர்கள் நேரடியாகக் கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டு, உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார். அதிலும் குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப் பிரிவில் இருந்து வரும் மனுக்களுக்கு, மிகுந்த முக்கியத்துவம் அளித்து நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றார்.

மேலும், வேலைவாய்ப்புக் கோரி வருபவர்கள் இனி மாவட்ட ஆட்சியரிடம் மனுக்களை வழங்காமல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை அணுகி வழங்குமாறு கூறினார். வேலைவாய்ப்பு பெற விரும்புபவர்கள் முறைப்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து அதில் மூப்பு பெற்று தற்காலிக அடிப்படையில் தான் பணியமர்த்தப்படுவார்கள் என்றும், நிரந்தரப் பணி தமிழ்நாடு அரசு தேர்வாணையக் குழு மூலம் தான் அமர்த்தப்படும் என்று பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுமாறு கூறினார்.

பெரியார் மாவட்டத்தில் ஓராண்டில் 24 மனுநீதி நாள் கூட்டமும், 36 மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டமும் நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.ஆர். லிங்கம்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**ஈரோடு,**
**பெரியார் மாவட்டம்**

## அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைப்பு!

1987-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள்' அமைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். தமிழகத்தில் 15 இடங்களில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்படும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஆண்டொன்றுக்கு 150 வழக்குகளுக்கு மேல் பதிவு செய்யப்படும். கீழ்க்கண்ட மாவட்டப் பகுதிகளின் தனித்தனியே மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்படும்.

சென்னை-1, சென்னை-2, திருச்சிராப்பள்ளி, பெரியார்-தலைமையிடம் ஈரோடு, மதுரை, காமராசர்-தலைமையிடம் விருதுநகர், கன்னியாகுமரி-தலைமையிடம் நாகர்கோயில்.

தமிழகத்திலுள்ள ஏனைய மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, அவற்றுக்கென 8 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் கீழே குறிப்பிட்டுள்ள தலைமையிடங்களில் அமைக்கப்படும்.

வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர் - வேலூர்.

சேலம், தர்மபுரி - சேலம்.

கோயம்புத்தூர், நீலகிரி - கோயம்புத்தூர்.

விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார், தென்னார்க்காடு-வள்ளலார், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். - செங்கல்பட்டு.

தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத் - தஞ்சாவூர்.

திண்டுக்கல்-அண்ணா, புதுக்கோட்டை - திண்டுக்கல்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், இராமநாதபுரம் - சிவகங்கை.

திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் - திருநெல்வேலி.

மொத்தம் தமிழ்நாட்டில் 15 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்படும்.

இந்தக் குறைதீர் மன்றங்களில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பதிவு செய்யப்படும் வழக்குகள் விசாரிக்கப்பட்டு நுகர்வோர் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

# புயல், வெள்ளத்தால் விழுந்துள்ள மரங்கள்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை!

அண்மையில் 5.12.1993 அன்று வீசிய புயலாலும் மற்றும் பெருமழையாலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 17,000 மரங்களும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் 33,000 மரங்களும், ஆகமொத்தம் சுமார் 50,000 தேக்கு மற்றும் சிறு மரங்கள் விழுந்துள்ளன. இவ்வாறு விழுந்த மரங்கள் ஆற்றுப்படுகைகளில் வளர்க்கப்பட்டவைகளாகும். விழுந்த மரங்களின் இன்றைய மதிப்பு சுமார் ரூபாய் 30 கோடி இருக்கும் என்று கருதப்படுகிறது.

இம்மரங்களை அப்புறப்படுத்த போர்க்கால அடிப்படையில் வனத்துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விழுந்த மரங்களைக் கடத்துவதனின்றும் தடுக்க, தனி கண்காணிக்கும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம் மரங்கள் திருடு போகாமல் தடுக்க உதவும்படி பொது மக்களும் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளனர்.

பொதுமக்கள் பயனடையும் வகையில் விழுந்த இம்மரங்களை அதே இடத்தில் ஏலம்விட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை இட்டுள்ளார். அதற்கேற்ப வனத்துறையால் ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. வனச்சட்டம் 1882-இன் படி மரங்கள் வளர்க்கப்பட்டு விழுந்த இடத்திலேயே பொது மக்கள் பயன்பெறும்வண்ணம் இம்மரங்கள் ஏலம் விடப்படும்.

தஞ்சாவூர் மாவட்ட வன அலுவலரால் பொதுமக்கள் நலன் கருதி, உள்ளூர் தினசரிகள் வாயிலாக இம்மரங்களை ஏலம் விடுவது குறித்து விற்பனை விளம்பரம் செய்யப்படும். இதுதவிர, கைப்பிரதிகள் மற்றும் தம்பட்டம் மூலம் பொதுமக்களுக்கு இந்த ஏலம் குறித்து அறிவிக்கப்படும். மர ஏலங்கள் அதிகப்படியான தொகை கேட்பவர்களுக்கு அளிக்கப்படும். முதல் ஏல விற்பனையினை 17.12.1993 அன்று நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# வேத ஆகம புத்தொளி பயிற்சி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் தமிழ்நாடு இந்து சமய அறநிலை ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டர்கள் மற்றும் பூசாரிகள் ஆகியோர் திருக்கோயில்களில் ஆகம பூசை முறைகளை முழுமையாக அறிந்து கொள்ளவும், ஆகம விதிகளின்படி பூசை நடத்தவும் ஏதுவாக ஓராண்டு கால 'வேத ஆகம புத்தொளி பயிற்சித் திட்டம்' நடத்தப்படும் என அறிவித்திருந்தார். அதன்படி இந்த புத்தொளி பயிற்சித் திட்டம் சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, கோவை, திருச்செங்கோடு, மதுரை, திண்டுக்கல், கும்பகோணம், மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மையங்களில் 6.10.1992 முதல் 30.9.1993 வரை நடத்தப்பட்டன. இப்பயிற்சி மையங்களில் மொத்தம் 346 அர்ச்சகர்கள், பட்டர்கள் மற்றும் பூசாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.100 வீதம் ஊக்கத் தொகையும், பயிற்சி கொடுத்த ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் சம்பளமும் வழங்கப்பட்டன.

மீதமுள்ள 500 அர்ச்சகர்கள், பட்டர்கள் மற்றும் பூசாரிகளுக்கு பயிற்சி அளிக்க 15.12.93 முதல் ஓராண்டு காலத்திற்கு புத்தொளி பயிற்சி வகுப்புகள் முறையே, சென்னை, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, சேலம், மதுரை, பழனி, தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொடங்கப்படும்.

# கதர் கிராமத் தொழில் இலாபகரம்

1992-93-ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழல் வாரியத்தின் உற்பத்தி இலக்கு 310 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அறிவுரை மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 1992-93- ஆம் ஆண்டில் 325 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து, நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட அதிக அளவில் உற்பத்தி செய்து அகில இந்திய அளவில் கதர் மற்றும் கிராமத் தொழல் பொருட்கள் உற்பத்தியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் இந்தச் சாதனையைப் பாராட்டும் வகையில் மத்திய அரசு இந்த வாரியத்திற்குச் சிறந்த சேவைக்கான கேடயம் ஒன்றை வழங்க உள்ளது.

அதே போன்று, நடப்பு ஆண்டு, காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளி பண்டிகை காலத்தில், தமிழ்நாட்டில் கதர் ஆடை சிறப்புத் தள்ளுபடி விற்பனைக் காலத்தில் மட்டும் 32 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. சென்ற ஆண்டு விற்பனையை விட இந்த ஆண்டில் 5.5 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டு ஒரு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம்:

# வனப்புப் பெறும் வனச்சோலைத் திட்டம்



'நீரின்றி அமையாது உலகு' என்பது பழந்தமிழ் வாக்கு. மழை யின்மையும் நிலத்தடி நீர்மட்டக் குறைவும் நிலத்தின் தன்மையையும் புவியியல் அமைப்பையும் மாற்றி விடும் என்பதில் ஐயமில்லை.

பருவ மழை பொய்த்து ஆற்றுப் பாசனம் குறைத்து நீர் ஆதாரம் நிலைகுலைத்து போனால், வளமிக்க நிலப்பகுதிகூட பாலைவனமாக மாறக்கூடிய அபாயத்தினை அனு பவத்தில் உணர்கின்றோம். இந் நிலையினை,

''முல்லையும் மருதமும்
முறைமையில் திரிந்து
நல்லியல்பு கெட்டு
நடுங்கு துயருற்று
பாலை என்றொரு படிவம்
கொள்ளும்''

என்று சிலப்பதிகாரம் சித்திரிக் கின்றது.

போதுமான அளவிற்கு நீர்வளம் இல்லாத காரணத்தினால் பாலை நிலத்திற்குரிய இயல்பினைப் பெற்று, வறட்சியின் கோரப் பிடியில் சிக்கி தவிக்கின்ற ஒரு சில மாவட்டங் களில் - புதுக்கோட்டை மாவட்ட மும் ஒன்றாகும்.

அதனால்தான், தொடக்க நாள் தொட்டு தமிழ்நாட்டில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம் செயல் படுத்தப்படும் மாவட்டங்களின் வரிசையில் புதுக்கோட்டை மாவட் டம் முக்கிய இடம் வகிக்கின்றது.

4,651 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள புதுக்கோட்டை மாவட் டத்தில் - ஏராளமான பரப்புள்ள நிலம் தரிசு நிலமாக - ஓடை அரிப்பு நிலமாக - சாகுபடிக்குத் தகுதியற்ற நிலப்பரப்பாக - எந்தவிதப் பயிரும் சாகுபடி செய்யப்படாத நிலையில் காலியிடமாகக் கிடப்பதை கண் கூடாகக் காண்கிறோம்.

இந்த அவல நிலையை மாற்றிட வும், மாவட்டத்தை முழுமையாகப் பசுமையாக்கிடவும் உருவாகி வரு வதுதான் - புதுக்கோட்டை பசுமைப் பெருந் திட்டம்.

வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தின் எதிர்காலம் குறித்த வினாவிற்குச் சரியான விடை, தோட்டக்கலைப் பயிர்கள்தான்.

கொய்யா, சாத்துக்குடி, மாதுளை, மா, சப்போட்டா, முந்திரி போன்ற தோட்டக்கலைப் பயிர்களைப் பெரு மளவிற்கு இம்மாவட்டத்தில் பயிரிட நல்ல வாய்ப்புண்டு.

இத்தகைய தோட்டக்கலைப் பயிர்கள் மக்களுக்குப் பயனும் வருவாயும் தரக்கூடியவையாகும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 40,000 எக்டேர் தரிசு நிலப்பகுதி உள்ளது. அதைப்போன்று ஓடை அரிப்புப் பகுதி சுமார் 10,000 எக்டேர் உள்ளது. இன்னும் பள்ளி,

கல்லூரி, அரசு அலவலக, தொழிற் கூட வளாகங்கள், சாலை ஓரங்கள், கண்மாய்க் கரைகள், புதிய குடியிருப்புப் பகுதிகள் என்று மரங்கள் வளர்க்க ஏராளமான நிலப்பகுதியும் இட வசதியும் உள்ளன. இந்த இடங்களில் எல்லாம் பழமரங்களை வளர்க்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவை அதிகரிக்கும் வகையில் சுமார் ரூ. 2.66 கோடி செலவில் 58 சமுதாயப் பாசனக் கிணறுகளை அமைக்கத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாசனக் கிணறும் 20 எக்டேர் பரப்பளவிற்குப் பாசன வசதி செய்துதரக் கூடியதாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் குறு விவசாயிகளுக்கு 33 1/3 சதவிகிதம் மானியம் வழங்க இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சமுதாயப் பாசனக் கிணறுகள் அமைக்கும் திட்டத்தினைப் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு கோடி ரூபாய் மானியம் அனுமதித்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் உன்னதத் திட்டம் 'சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்'. ஊராட்சிப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் கன்றுகள் உற்பத்தி செய்து, கிராமப்புறங்களில் வளர்த்து மக்களின் வருவாய்க்கும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கும் உதவும் சீரிய திட்டம் 'சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்'. இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூ.15.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 10 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, பல்வேறு இடங்களுக்கு வினியோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படும் 7 மாவட்டங்களில் புதுக்கோட்டை ஒன்றாகும். வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்பிற்கும் நில அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுத்து பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ், காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில அபிவிருத்திப்




பணிகளுக்காக சுமார் 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

தைல மரங்கள் (Eucalyptus) சவுக்கு, முந்திரி, ஓடை கருவேலன் போன்ற மரங்களைச் சுமார் 2,200 எக்டேரில் பயிரிடவும் கடந்த ஆண்டு பயிரிடப்பட்ட இத்தகைய மரங்களைப் பராமரிக்கவும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் மூலம் சுமார் ரூ.1.69 கோடி செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வனத்துறையின் மூலம் தொகுப்புக் காடுகள் உருவாக்கவும், சாலையோரத் தோட்டங்களை அமைக்கவும் நடப்பாண்டில் சுமார் 45 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட உள்ளது.

காடுகள் அழிந்ததால் - பருவ மழை பொய்த்தது; பருவமழை பொய்த்ததால் பாசனத்திற்குத் தண்ணீர் இல்லை; நிலப்பரப்பில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது; வளம் குன்றியது. நாட்டில் வறுமை மிகுந்தது; இப்படி சங்கிலித் தொடர்போல் மேலோங்கிடும் அவலங்களைப் போக்கிட - சுற்றுச் சூழலைப் பாதுகாத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கண்ட உன்னதத் திட்டம் தான், வனச்சோலைத் திட்டம்.

இந்த வனச்சோலைத் திட்டத்தில் விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், தொண்டு நிறுவனங்கள் தொழிற்சாலைகள் என்று அனைவரும் இத்திட்டத்தின் வெற்றிக்காக உழைத்திட வகை செய்யப்பட்டுள்ளது.

மரங்கள் அழிந்தால் - வெற்றிடமாக மாறிய பூமிப் பரப்பில் பசுஞ் சோலைகள் பூத்துக் குலுங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள வனச்சோலைத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் 10,000 மரக்கன்றுகள் நடத் திட்டமிட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில், புரட்சித்தலைவி வனச்சோலைத் திட்டத்தை கடந்த 15.9.93 அன்று மரக்கன்றுகளை நட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஷஷி ஷேகர், இ.ஆ.ப., தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்கள், ஓடை அரிப்பு நிலங்கள் - சாகுபடிக்கு தகுதி யற்ற நிலப்பகுதி - ஆகியவற்றில் மரம் வளர்ப்பதற்கு ஏதுவாக அபிவிருத்திப் பணிகளைச் செயல்படுத்துமாறு வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், தோட்டக்கலை, வனத்துறை ஆகியவை முடுக்கிவிடப்பட்டு உள்ளன.

அரசின் அரவணைப்போடும், மாவட்ட நிர்வாகத்தின் செயல் திறனோடும் - பெருமளவில் மரம் வளர்க்கப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் முழுமையாகப் பசுமை யாகும் காலம் வெகு தொலைவில் இல்லை.

**கி. கண்ணதாசன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை**

# இலட்சிய வீரர் இராஜாஜி

— மயிலைநாதன்



இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை எழுதுகிறவர்கள் இராஜாஜியைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அந்த அளவுக்கு அவரது வாழ்க்கை விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருந்தது.

அவர் பிறந்தது 1878 டிசம்பர் 8-ஆம் நாளா, 10-ஆம் நாளா என்று பத்திரிகையாளர் ஒருவர் இராஜாஜியைக் கேட்டபோது, ''அதை என்னாலும் நிச்சயமாகக் கூற முடியவில்லை'' என்றார். அதில் அவருக்கு சிரத்தை இல்லை என்பதை அது உணர்த்துகிறது. அவர் தமது சுய சரிதையை எழுத விரும்பவில்லை என்பதிலிருந்து அம்மாதிரி விஷயங்களில் அவர் சிரத்தை காட்டவில்லை என்பது மேலும் தெளிவாகிறது.

டிசம்பர் மாதத்தில் பிறந்த இராஜாஜி, டிசம்பர் மாதத்திலேயே, அதாவது 1972 டிசம்பர் 25-ஆம் நாள் கிறிஸ்துமஸ் தினத்தில் அவர் தமது மூச்சை அடக்கிக் கொண்டார். தமது அறிவின் பலத்தால் இந்தியாவின் அரசியலையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த அந்த மாபெரும் சிந்தனையாளர், வேறு எவராலும் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டு மறைந்து விட்டார்.

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியில் அமர்ந்த போதும் அவர் எளிமையாக வாழ்ந்தார். அவர் மனம் சுக போகங்களை நாடியதில்லை. மாறுபட்ட கருத்து கொண்டவர்களுடனும் நட்புடன் பழகும் உயரிய பண்புகளை அவர் பெற்றிருந்தார்.

அவர் எப்போதும் தேச நலனையே பெரிதாகக் கருதியதால், சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில்கூட அசாதாரண கருத்துக்களை வெளியிட்டு எதிர்ப்புக்கும் பழிச் சொல்லுக்கும் ஆளானார்.

1937-இல் சென்னை மாகாணப் பிரதமராக இருந்தபோது இந்தியை கட்டாய பாடமாக்கிய அவர், பிற்காலத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்து போர் தொடுத்தார். சோஷலிசத்திற்கு நிகரில்லா வியாக்கியான கர்த்தாவாக விளங்கிய அவர், பிற்காலத்தில் அது சர்வாதிகார அமைப்பில்தான் சாத்தியமாகும் என்று கூறி நியாயப்படுத்தினார். இதெல்லாம் பெரிய முரண்பாடுகள் போல தோன்றலாம். இல்லை; வளமான சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சியே ஆகும்.

அடிநாட்களிலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்த அவர் ''வெள்ளையனே, வெளியேறு'' என்ற முழக்கத்துடன் காங்கிரஸ் சபை 1942-இல் நிறைவேற்றிய ஆகஸ்ட் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்தார். உலக ஜனநாயக நாடுகளை கபளீகரம் செய்து சர்வாதிகாரத்தை நிலைநாட்டத் துடிக்கும் அச்சு நாடுகளின் கரத்தை ஆகஸ்ட் தீர்மானம் பலப்படுத்தும் என்பது இராஜாஜியின் வாதம்.

அவர் தமது வாதத்தை நிலைநாட்ட எழுதியும் பேசியும் வந்ததைச் சகிக்க முடியாத காங்கிரஸ்காரர்கள் அவர் செல்லும் இடமெல்லாம் கல்லெறிந்து கூட்டங்களைக் கலைத்தார்கள். அந்த நேரத்தில் ஒத்தக் கருத்துடன் இயங்கி வந்த பெரியாருடைய ஆதரவை நாடவும் அவர் தயங்கவில்லை. பெரியார் தமது நீதிக் கட்சித் தோழர்களையும் சுயமரியாதை இயக்கத் தோழர்களையும் இராஜாஜியின் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி சுற்றறிக்கை விட்டதால், இராஜாஜி முன்னிலும் பன்மடங்காக காங்கிரசையும் மகாத்மா காந்தியையும் வன்மையாகக் கண்டித்துப் பேச முற்பட்டார்.

அதைக் கண்டு சகிக்காத பிரபல பத்திரிகையாளர் சதானந்த், பம்பாயில் நடத்தி வந்த தமது ''ஃப்ரீபிரஸ் ஜர்னல்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் இராஜாஜியைக் கடுமையாக விமர்சித்துக் கட்டுரைகள் எழுதினார்.

அந்தப் பத்திரிகையைப் படித்த மகாத்மா காந்தி துடிதுடித்துப் போனார். ''அன்புள்ள சதானந்த், நீங்கள் இராஜாஜியை இம்மாதிரி கடுமையாக விமர்சிப்பது விவேகமானது அல்ல. ஆகஸ்ட் போராட்டத்தையும், என்னையும் தாக்கினால் எவ்வளவு பெரிய எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பது இராஜாஜிக்குத் தெரியும். அப்படியிருந்தும் தேச நலன் கருதி அவர் தமது கருத்துக்களை வெளியிட்டுத்தான் தீரவேண்டும் என்று முடிவு செய்து செயலில் இறங்குவது எவ்வளவு பெரிய தியாகம் தெரியுமா? சொந்த நலனைக் கருதக் கூடியவர்கள் இப்படிப்பட்ட தியாகங்களைச் செய்ய முடியுமா? அப்படிப்பட்டவரைக் கடுமையாகத் தாக்குவது நல்லதல்ல'' என்று பொருள்பட மகாத்மா காந்தி சதானந்துக்குக் கடிதம் எழுதினார். (1934-இல் சென்னையில் இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஏடுகளைத் துவக்கியவர் சதானந்த் அவர்களே ஆவார்).

சுயநலம் சிறிதுமில்லாமல் தேச நலனையே அவர் பெரிதாகக் கருதி, தமது கருத்துக்களை வெளியிட்டு வந்ததால்தான், 1946-இல் இடைக்கால அமைச்சரவையில் அமைச்சராகவும், 1947-இல் நாடு விடுதலை பெற்றபோது மேற்கு வங்க ஆளுநராகவும், 1948-இல் இந்தியாவின் முதல் கவர்னர்-ஜெனரலாகவும் பதவிகள் அளிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார் என்பதே நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அரசியலை அவர் பெரிதாக எப்போதும் கருதியதில்லை. மக்களுக்கு சுபிட்சமான வாழ்க்கையைத் தரவேண்டும் என்பதையே இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

அதனால்தான் அவர் தமது ஓய்வு நேரத்தையெல்லாம் மக்களுக்குச் சிறந்த போதனைகள் அளிக்கத் தகுந்த கட்டுரைகளையும் நூல்களையும் எழுதுவதில் செலவிட்டு வந்தார்.

சக்கரவர்த்தி திருமகன், வியாசர் விருந்து, கண்ணன் காட்டிய வழி, உபநிடதப் பலகணி, இராஜாஜியின் குட்டிக் கதைகள், சோக்ரதர், திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆகிய நூல்கள் அவரது இலட்சியத்தைச் சுட்டிக்காட்டி புகழை நிலைநாட்டி வருகின்றன.



# திருச்சிராப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்தநாள் விழா

அரசியல் புரட்சியுடன், அறிவியல், கலை, இலக்கியத் துறைகளிலும், மறுமலர்ச்சியை உருவாக்கிய காந்திய சகாப்தத்தைப் பிரகாசிக்கச் செய்த தனிப் பெருந்தலைவர்களில் ஒருவராகிய மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 115-வது பிறந்த நாள், மாநில அளவிலான விழா, தமிழக அரசினால் 20.12.93 அன்று மாலை 6 மணியளவில், திருச்சிராப்பள்ளி, தில்லை நகரில் உள்ள 'மக்கள் மன்ற'த்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசும்போது ''மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாள் விழாவை மாநில அளவில் கொண்டாட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி இன்று திருச்சிராப்பள்ளியில் கொண்டாடப்படுகிறது. மக்கள் மனதில் மறையாது இருக்கும் தலைவர் இராஜாஜி. இராஜாஜி அவர்கள் பதவியைத் தேடிச் சென்றதில்லை. பதவிகள் தான் அவரைத் தேடி வந்தன. அவர் வகிக்காத பதவியில்லை. சென்னை நகரை ஆந்திராவுடன் சேர்க்கவேண்டும் என்று ஆந்திர மக்கள் போராடிய போது, சென்னை தமிழகத்தில்தான் இருக்கவேண்டும் என்று எடுத்துக் கூறினார். அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி தமிழகத்துடன் இருக்கக் காரணமானவரும் மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான். அவரது காலத்தில்தான் வணிகவரி கொண்டு வரப்பட்டது. இன்று வணிகவரி மூலம் ரூ.3,500 கோடி கிடைப்பதால் தான் அரசின் திட்டங்களைத் தங்கு தடையின்றிச் செயல்படுத்த முடிகிறது. அணு ஆயுதங்கள் அழிக்கப்படவேண்டும் என்று குரல் கொடுத்தவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இதற்காக அமெரிக்கா சென்று அவர் கென்னடியுடன் பேசினார். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்சன் இந்தியா வந்து இருந்தபொழுது, சென்னையில் இராஜாஜி அவர்களது இல்லம் சென்று சந்தித்துப் பேசினார். பல நாடுகளின் தலைவர்களுக்கும் வழிகாட்டும் தலைவராக மூதறிஞர் இராஜாஜி விளங்கினார்'' என்று பேசினார்.

அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் சிறப்புரையாற்றும் பொழுது, ''தமிழகத்தில் தீண்டாமை ஒழிப்பு மற்றும் ஆலயப் பிரவேசச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் மூதறிஞர் இராஜாஜிதான். இந்திய அரசியலிலும், தமிழக அரசியலிலும் மிக உயர்ந்த பதவியை வகித்துள்ளார். வீண் புகழ்ச்சிக்கு மயங்காதவர் அவர். அரசியலில் மட்டுமன்றி, இலக்கியத்துறையிலும் பல சாதனைகள் படைத்தவர். மூதறிஞர் இராஜாஜி அவர்களது சிந்தனைக்குச் செயல் வடிவத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கொடுத்துவருகிறார்'' என்று கூறினார்.

விழாவில் மூதறிஞர் இராஜாஜி அவர்களது திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் விழாப் பேருரையாற்றும்பொழுது, ''இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திற்கும் கிடைக்காத பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி போன்றவர்கள் நமது மாநிலத்தில் தோன்றியதால்தான் அந்தப் பெருமை நமக்குக் கிடைத்துள்ளது. தொழில் கல்வி முறையை முன்பே கொண்டு வந்தவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இன்று மாண்புமிகு



தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நேர்மையான நாணயமான ஆட்சியை நடத்தி வருகிறார்கள். தமிழகத்தில் திரா விட ஆட்சி ஏற்படக் காரணமாக இருந்தவர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும் கூட்டணி ஏற்படுத்தி வழி கோலினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக்கு வர ஆலோசனை வழங் கியவரும் மூதறிஞர் இராஜாஜி தான். அவரது ஆற்றலையும், எளி மையையும் கொண்டு, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விளங்கி வருகிறார். மூதறிஞர் இராஜாஜிக்கு நன்றி செலுத்திடும் வகையில், இங்கே இந்த விழா சிறப் பாகத் தமிழக அரசினால் கொண் டாடப்படுகிறது'' என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வந்திருந்த வர்களை வரவேற்றுப் பேசினார். திருச்சிராப்பள்ளி மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கோ. பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சமூக நலத்துறை, வருவாய்த்துறை ஆகியவற்றின் மூலம் 340 நபர்களுக்கு ரூ.14,75,579 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அதில் 60 பெண்களுக்குத் தமிழ்நாடு ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இவ் விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் - நலி வுற்ற மக்களுக்கு, அரசு சார்பில் நலத்திட்ட உதவிகளான - தொழில் கடன், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தொகை, இலவசப் பட்டா, அதிக மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவியருக்குப் பரிசுத் தொகை, விசைத் தெளிப்பான்கள், சலவைப் பெட்டி ஆகியவை வழங்கப்பட்டன. தமிழக முதல்வர் புரட்சித்தலைவி குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், விதவை யின் மகள் திருமண உதவித் திட்டம், விதவை மறுமண உதவித் திட்டம் போன்றவை தொடங்கி வைக்கப்பட்டன - அவற்றின்கீழ் உதவப்பட்டன.

விழாவில் இசை நிகழ்ச்சியைக் கேட்டும், திருச்சிராப்பள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் அமைக்கப்பட்டிருந்த சிறிய புகைப் படக் காட்சியையும் கண்டு திரளான மக்கள் மகிழ்ந்தனர்.

**ஆ. கோபாலன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செ)**
**திருச்சிராப்பள்ளி**



**★ நம்பிக்கை எதன்மீது ஏற்பட்டாலும் சரிதான்; அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டும்; அப்போதுதான் வெற்றி கிட்டும்.**

**★ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி உரிமை களைப் பெற்றிடுவோம்! அமைதியும், ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழி வகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்!**



# டாக்டர் புரட்சித்தலைவரின் ஆறாவது நினைவுநாள் அஞ்சலி

**ப**த்தாண்டுக் காலம் தலைசிறந்த தமிழக முதல்வராக - இருபது ஆண்டுக் காலம் தமிழ்த் திரையுலகின் மன்னனாக - இந்த நூற்றாண்டின் தன்னிகரற்ற மனிதாபிமானியாகத் திகழ்ந்து, வாழும்போதே வரலாற்று நாயகனாக விளங்கிய பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 6-வது நினைவு நாள் 24.12.'93 அன்று தமிழகமெங்கும் அனுசரிக்கப் பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளன்று நடத்தப்படும் அமைதி ஊர்வலம் போன்றே இவ்வாண்டும் நடைபெற்றது.

காலை ஏழு மணியிலிருந்தே ஏராளமான பொதுமக்களும் கட்சித் தொண்டர்களும், பிரமுகர் களும் அண்ணாசாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலையருகே குவியத் தொடங்கினர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் பேரறிஞர் அண்ணா சிலையருகே வந்து சேர்ந்தனர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காலை 10 மணி யளவில் வருகை புரிந்தார். அவர் வந்தவுடனே ஊர்வலம் தொடங்கியது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் திறந்த ஜீப்பில் சென்றனர். அவர்களுக்கு முன்னால் தொண்டர்கள், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உருவப்படத்தை ஏந்திச் சென்றனர்.

முதல்வர் வந்த ஜீப்புக்குப் பின்னால் அனைத்து அமைச்சர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சி நிர்வாகிகளும், இளைஞர் களும், மாணவர்களும், தாய்மார்களும், மற்றும் பொதுமக்களும் திரளாக வந்தனர்.

அமைதி ஊர்வலம் வாலாஜா சாலை வழி யாக, மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தை அடைந்தது. அங்கு மறைந்த முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் சமாதியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவரைத் தொடர்ந்து அனைத்து அமைச்சர் பெருமக்களும் மறைந்த தலைவருக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். அதன் பிறகு மாணவர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், பொதுமக்கள் ஆகியோர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனையடுத்து எம்.ஜி.ஆர். சமாதியின் முன்னர் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சென்றனர். அங்கு மாண்புமிகு

நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதாவது:

''நமது இதய ஏந்தல் பொன்மனச் செம்மல் நம்மைவிட்டுப் பிரிந்து 6 ஆண்டுகள் ஆகிறது. அவரது உணர்வுகள், வழிமுறைகள் அனைத்தும் நம் நெஞ்சில் நிலைத்து இருக்கும். அவர் ஆற்றிய பணிகள் தமிழகத்தின் பெருமையை நிலை நிறுத்தியது. அவரது பணியையும் கொள்கைத் திட்டங்களையும் நாம் பேணிக் காக்கச் சூளுரை ஏற்போம். அவர் விட்ட பணியைப் புரட்சித் தலைவி இன்று தொடர்கிறார். புரட்சித்தலைவ ரின் வாரிசு என்பதை நிரூபித்துவிட்டார்.

''புரட்சித்தலைவரின் புகழைக் காக்க புரட்சித் தலைவி ரூ.2½ கோடி செலவில் நினைவிடத்தை அமைத்தார். அவருக்கு உருவச்சிலையை அமைத் தார். அவர் பெயரில் போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கினார். மேலும், எம்.ஜி.ஆரின் புகழைப் பரப்ப ஒலி ஒளிக் காட்சி அமைக்கவும் முயற்சி எடுத்து வருகிறார்.

''புரட்சித் தலைவியின் ஆட்சிக்கும் அ.இ.அ.தி.மு.க.வுக்கும் நாம் என்றும் உறுதுணை யாக நிற்போம்''.

அதைத் தொடர்ந்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் உறுதி மொழி வாசிக்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களும், அமைச்சர் பெருமக்களும், மற்றவர் களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

அந்த உறுதிமொழி பின்வருமாறு:

★ இதய ஏந்தல் புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்துள்ள கொள்கை, குறிக்கோள் களை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

★ அவர் கற்றுத் தந்த திராவிட இன உணர்வும், தமிழ் மொழிப் பற்றும், இந்திய நாட்டுப்பற்றும் பெற்றவராய்ப்பெரிதும் செயல்படுவோம்.



★ பேரறிஞர் அண்ணா அறிவுறுத்திய புரட்சித் தலைவர் பின்பற்றிய கடமை-கண்ணியம்- கட்டுப்பாடு காப்போம்.

★ அண்ணாவின் இதயக்கனியாம் புரட்சித் தலைவர் வழி நின்று அவர்புகழையும்,பெருமையை





யும் பரப்பும் புரட்சித்தலைவி வழி நடப்போம்.

★ சாதி, சமய மாறுபாடற்ற சமுதாய மறுமலர்ச்சி காணப் பாடு படுவோம்.

★ ஏற்றத் தாழ்வற்ற எழுச்சி மிகு சமுதாயம் உருவாக உழைப்போம்.

★ உலகத் தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு உயர்ந்திட உறுதுணை புரிவோம்.

★ திராவிட நாகரீகம், தமிழர் பண்பாடு ஆகிய வற்றைப் பேணி வளர்ப்போம்.

★ தாய்த்தமிழகத்தில் தமிழ் மொழியே அனைத்து மத்திய, மாநில அரசுத் துறைகளிலும் ஆட்சி செலுத்தும் நிலைமையே உருவாக்கப் பாடுபடு வோம்.

★ இந்தி மொழித் திணிப்பால், தாய்த் தமிழ் மொழியின் ஆக்கம் அனைத்தும் அழிவதைத் தடுத்திட அண்ணாவின் இருமொழி கொள்கை யினையே வற்புறுத்திக் கடைப்பிடிப்போம்.

★ இந்திய ஒருமைப்பாட்டை என்றென்றும் பேணிக் காத்திடுவோம்.

★ அரசியலில் மக்களாட்சி முறையே நீடித்து நிலைக்கச் செயலாற்றுவோம்.

★ மத்திய அரசின் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தால் மாநிலங்கள் அவதியுறும் நிலையை மாற்றி அமைக்கப் பாடுபடுவோம்.

★ மாநிலங்கள், அரசியல் மற்றும் பொருளா தாரத்தில் மாநிலத் தன்னாட்சி உரிமையோடு அதிக அதிகாரங்களைப் பெறப் பாடுபடுவோம்.

★ சாதி சமயங்களின் பேரால் நாட்டில் வன் முறை ஏற்பட அனுமதியோம்.

★ பயங்கரவாதத்திற்குத் துளியும் இடம் கொடுக்க மாட்டோம்.

★ மதவெறியோ இனவெறியோ இந்திய ஒருமைப் பாட்டைத் சிதைத்திட என்றும் அனுமதியொம்.

★ தீண்டாமையை அறவே ஒழித்து சாதிக் கொடுமையை அகற்றுவோம்.

★ தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள், மற்ற மக்களைப்போல் சமவாய்ப்பும், அந்தஸ்தும் பெறுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவோம்.

★ பெண்கள் எல்லாத்துறைகளிலும் சம உரிமை பெற்று முன்னேற்றப் பாடுபடுவோம்.

★ ஏழைக் குடிமக்களைக் கெடுக்கும் மது அருந் தும் பழக்கத்தை அறவே அகற்றப் பாடுபடுவோம்.

★ சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள விவ சாயிகள், தொழிலாளர்கள் போன்ற உழைப் பாளர்களின் உரிமைகளைக் காப்போம்.

★ பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்விற்காக எல்லா வகைகளிலும் உழைப்போம்.

★ அரசியலில் நீதி, நேர்மை, நாணயம், ஒழுக்கம் நிலைத்திடப் பாடுபடுவோம்.

★ புரட்சித் தலைவர் புகழ்பாடும் புரட்சித் தலைவியின் ஆட்சி, பெருமையுடன் நடைபெற எல்லா வகையிலும் ஒத்துழைப்போம்.

★ புரட்சித் தலைவரின் மங்காப் புகழ் பரப்பி, அவர் வழியில் என்றும் பீடு நடைபோடுவோம்.

அண்ணாவின் இதயக்கனி புரட்சித் தலைவர் நாமம் வாழ்க.

— இவ்வாறு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உறுதிமொழி நிகழ்ச்சி நிறைவு பெற்றதும், நினைத்ததையெல்லாம் சாதித்துக் காட்டிய சரித் திர நாயகனின் சாதனைகளை நினைவு கூர்ந்த வண்ணம் அனைவரும் கலைந்து சென்றனர்.

— என். இளங்கோ

# என்நாளும் நீ வாழ்க! இதயத்து நிலவாக!

கவிஞர் இளந்தேவன்



கண்ணிரண்டில் நிழலாடும் காவியத்து நாயகனே,
மன்னவனே கண்ணுறங்கு! மண்மடியில் கண்ணுறங்கு!

கண்டியிலே கண்திறந்து கடற்கரையில் தூங்க வந்த
தண்டமிழே கண்ணுறங்கு! தமிழ்த் தலைவா கண்ணுறங்கு!

தாய்களுக்குத் தாயாகித் தவிக்கின்ற தளிர்களது
வாய்களுக்குச் சோறளித்த வரலாறே கண்ணுறங்கு!

ஏழிலே தொடங்கி, எழுபதிலே புள்ளிவைத்து
நீளப் பணிபுரிந்த நிறைமதியே கண்ணுறங்கு!

தேய்வதே அறியாத தென்னாட்டுச் சந்திரனே
ஓய்வெடுக்கும் நேரமிது உறங்கப்போ கண்மணியே!

புதைத்துள்ளோம் என்றா நினைக்கின்றாய் - பூமியிலே
விதைத்துள்ளோம் ஐயா விழிமூடி நீ உறங்கு

வீரத்தின் விளைநிலமே வீரத்தை விலக்காத
ஈரத்தின் இருப்பிடமே! இளமைக்குப் புகலிடமே!

உன் ஒர  இதழ்களிலே உட்காரும் புன்னகைக்குக்
கோடி கொடுத்தாலும் குறைவென்று தோன்றாதா!

பூக்களுக்குப் புன்னகையும் பொன்னுக்குத் தகதகப்பும்
கற்றுக் கொடுப்பதற்குக் கண்திறந்த ராசாவே,

கோரப்படுத்தும் அந்தக் கொலைகாரச் சாவும் உன்னை
ஆரத் தழுவுகையில் அழகாகக் காணுதடா!

சாவுக்கும் அழகூட்டும் சகாப்தமே, உனைப்போல
வாழ்வுக்கும் சாவுக்கும் வழங்குபவர் வருவாரா?

கவிஞர்க்கு நீ கவிதை! கலைகளுக்குள் தமிழ்க் கலை நீ!
மனிதருக்குள் மா மனிதன்! மனமெல்லாம் உன்கோயில்!

பனிமலையின் உச்சியிலே பலர்புகழ இருந்தாலும்
பாமரச் சமவெளிக்குப்பாய்ந்து வந்த மாநதியே!







நதிக்கு நதியாம் நற்கருணைக் கார்முகிலே!
விதிக்கு விதியாய்எங்கள் விழிக்கு விருந்தானவனே!

காய்ந்த தலை ஓய்ந்த உடல் வாய்ந்தவர்கள் கதறுகிறார்
சாய்ந்திருக்கும் சரித்திரமே சற்றொருகால் பேசாயோ!

என்ன துயரம் எமக்கென்று கேட்பாயேல்
சின்ன துயரம் தான் ஸ்ரீராமச் சந்திரனே

தேசமெல்லாம் சுற்றி வந்த தேரொன்று தன்னுடைய
வாசலிலே வந்துடைந்தால் வரலாறு தேம்பாதா?

''எமனுக்கு எமகண்ட வேளை உன்றன்
எதிரில்அவன் வருகின்ற வேளை'' என்று
பாடித் திரிந்தஎங்கள் பாட்டுக்கும் பொருளிலையோ?

மூன்று முறை தோற்றான் மூடமானான் காலன் என்று
தோன்றிற்றே அதுவும்வெறும் தோற்றமல்லால் வேறில்லையோ!

தாக்கத் தான் வந்து தலைதப்பிப் போன எமன்
தூக்கத்தில் தாக்குவதைத் தோல்வி என்று கருதானோ!

புத்தமுதம் போதாத பொன்னாட்டுத் தேவர்களும்
சத்துணவு கேட்டுனது சந்நிதிக்கு வந்தாரோ!

அண்ணா அழைத்தாரோ! அலைகடல்தான் கெஞ்சியதோ!
கண்ணான கண்ணே, ,கடற்கரையில் கண்ணுறங்கு!

சித்தத்துள் சித்தமாய்ச் சிவப்பணுவில் கலந்துவிட்ட
ரத்தத்தின் ரத்தமே ராசாவே கண்ணுறங்கு!

நித்தியத் தாய் பாலூட்ட நிலமடந்தை தாலாட்ட
சத்தியத்தாய் தன்மடியில் சந்திரனே கண்ணுறங்கு!

பொற்காலம் படைக்கின்ற புரட்சித்தலைவியிடம்
உன்னையே காணுவதால் உள்ளத்தில் அமைதி கண்டோம்

உன் கனவு நிறைவேற அவர் வழியில் பணி தொடர்வோம்
எந்நாளும் நீ வாழ்க, இதயத்தில் நிலவாக!



# காவல்துறை நவீன மயமாக்கப்படும்

## —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

**மா**ண்புமிகு முதல்வர் அவர்கள், 28.12.93 அன்று காலை 8.30 மணிக்குத் தொடங்கி வைத்து, தலைமையேற்று நடத்திய உயர்நிலைக் காவல்துறை அலுவலர்களின் கூட்டம் 1.30 மணி வரை 5.00 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. பின்னர் 1.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் காவல்துறை அலுவலர்களுக்கும் பகல் விருந்து வழங்கினார். பிற்பகல் 3.00 மணிக்கு மீண்டும் கூட்டம் தொடங்கி, 7.30 மணி வரை 4½ மணி நேரம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எல்லா மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர்களும், சரகக் காவல் துறை துணைத் தலைவர்களும் (Range DIGs) குறிப்பிட்ட ஐ.ஜி-க்களும் பலதரப்பட்ட விஷயங்கள் குறித்து, தங்களது கருத்துக்களையும், தங்கள் பணியை இன்னும் சிறப்புடன் பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஆற்றுவதற்காகத் தங்களது தேவைகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். கூட்டத்தின் நிறைவில் தலைமைச் செயலாளர் தனது கருத்துக்களை எடுத்து முன்வைத்தார்.

கூட்டம் நடைபெறும்போதே தனது கருத்துக்களை அவ்வப்போது வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனது முடிவுரையில், காவல்துறை மக்களுக்குச் சிறந்த முறையில் மனிதாபிமானத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்ற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதுடன், தமிழகக் காவல்துறையை நவீனமயமாகவும், மனிதாபிமானமிக்கதாகவும் (Modernise and humanise the force) ஆக்குவதே தனது தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் மேற்கொண்ட பணி என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார்.

காவல் நிலையங்களுக்குத் தேவையான தடவாளங்களைப் பெற்றுத் தருவதில் தனது அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விளக்கினார். எல்லாக் காவல் நிலையங்களுக்கும் தேவையான பணியாளர்கள், காவலர்கள், ஜீப் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவை படிப்படியாக வழங்கப்படும் என அறிவித்தார். காவலர்களின் குடியிருப்புகளுக்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து மராமத்துப் பணிகளும் படிப்படியாக விரைவில் மேற்கொள்ள அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் அறிவித்தார்.

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பணி புரியும் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் அனைவருக்கும் ஊதிய நிர்ணயத்தில் ஏற்பட்ட பண இழப்பை ஈடுகட்டுவதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனி ஊதியமாக (Personal Pay) ரூ.300 வழங்கப்படும் என்ற முடிவை அறிவித்தார்.

இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் அதாவது மார்ச் 1994-க்குள், 200 ஜீப்புகள் வாங்கி காவல் நிலையங்களுக்கு வழங்கப்படும் என்றும், அடுத்த நிதியாண்டில் அதாவது ஏப்ரல் 1994 முதல் 1995-க்குள் மீதமுள்ள காவல்நிலையங்களுக்கும் வழங்கப்படும் என்பதையும், மார்ச் 1995 இறுதியில், எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் வழங்கப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் போன்ற மலைப்பகுதிகளில் அமைந்துள்ள காவல்நிலையங்களுக்கு 'ரூம் ஹீட்டர்கள்' வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள காவல்நிலையங்களுக்கு 'ரூம் ஹீட்டர்கள்' வழங்கப்படும் என்று அறிவித்தார்.

1. நீலகிரி மாவட்டம்
2. கொடைக்கானல் மலைப்பகுதி
3. ஏர்க்காடு
4. தாளவாடி
5. பர்கூர்
6. வால்பாறை
7. அசலூர்

மேலும், காவல்துறைச் சரக டி.ஐ.ஜி.க்களின் வீட்டில் உள்ள தொலைபேசிக் கட்டணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு (Ceiling) முழுமையாக நீக்கப்படும் என்றும், இனி அவர்களின் வீட்டில் உள்ள தொலைபேசிக் கட்டணத்திற்கு, உச்சவரம்பு கிடையாது என்றும் அறிவித்தார்.

தமிழகக் காவல்துறையினர், எவ்விதமான பாரபட்சமோ, பயமோ இன்றி, யாருடைய தலையீடும் இன்றி, மக்களுடைய சேவை ஒன்றே தங்களது தலையாய கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற அறிவுரையுடன் தனது நிறைவு உரையை முடித்தார்.

இறுதியில் க்யூ-பிரிவைச் சேர்ந்த காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. கே. ராமானுஜம், காவல்துறை அலுவலர்களின் ஒட்டுமொத்த சார்பில், இந்தக் கூட்டத்திற்கு முழு நாளை ஒதுக்கி, இந்தக் கூட்டத்தை முன்னின்று நடத்தி, 48 பேர்களுக்கு மேல் பேச அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்தார்.


SECY HOME
STER



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள்

கடந்த 1992-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், 1993-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயல், பெருமளவு வெள்ளச் சேதத்தினாலும், முற்றிலும் இடிந்துபோன வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகளை வீடு இழந்தவர்களுக்குக் கட்டிக் கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

அத்திட்டத்தின்படி, தமிழக அரசு மற்றும் மத்திய அரசின் மானியம், 'ஹட்கோ' நிறுவனத்தின் கடன் உதவி ஆகியவற்றுடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் 27 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள இந்தத் திட்டத்தின் மூலம் 18,000 வீடுகள் கட்டப்படும். ஒரு வீட்டின் மதிப்பான 15,000/- ரூபாயில் 40 சதவிகிதம் 'ஹட்கோ' கடன் உதவி, 30 சதவிகிதம் தமிழக அரசின் மானியம் மற்றும் 30 சதவிகிதம் மத்திய அரசு மானியம் ஆகியவை அடங்கும்.

1992-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புயலாலும், பெருவெள்ளத்தாலும், பாதிப்புக்கு உள்ளான, காமராஜர், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி கட்டபொம்மன், திருச்சிராப்பள்ளி, சிதம்பரனார், இராமநாதபுரம், புதுக்கோட்டை, பசும்பொன்முத்துராமலிங்கத்தேவர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். தென் ஆர்க்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், நீலகிரி, திண்டுக்கல்-அண்ணா மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும், வீடு இழந்து பாதிப்புக்கு உள்ளானவர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைவார்கள்.

அதேபோல, இந்த ஆண்டு (1993) அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்பட்ட புயல், பெருமழை வெள்ளத்தினால் முழுமையாக வீடு இழந்தவர்களுக்கும், இந்தத் திட்டத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தை 1993-94-ஆம் நிதி ஆண்டிற்குள், அந்தந்த மாவட்டங்களிலுள்ள கட்டட மையங்கள் மற்றும் பொறியியல் துறைகளின் மூலமாகக் குறைந்த செலவு-தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, விரைவாக வீடுகளைக் கட்டித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.


## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

### விளம்பரம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விளம்பர எண்.26/93-ல் நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் சில குறிப்பிட்ட வகை ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டு வெளியான நான்கு நகராட்சி ஆணையர், நிலை-3 பதவிகளுக்கு, விண்ணப்பித்திருந்தோருக்கு ஒரு முதன்மைத் தேர்வும் (Main Written Examination) அதையடுத்து நேர்முகத் தேர்வும் தனியே நடைபெறும். அன்னார், 8.1.94 அன்று நடைபெற இருக்கும் முதனிலைத் தேர்வுக்குரிய (Preliminary) நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றிருந்தாலும், அத்தேர்வினை எழுத வேண்டிய அவசியம் இல்லை. முதன்மைத் தேர்வுக்குரிய பாடத்திட்டம் மற்றும் தேர்வு நடைபெறும் நாள் குறித்த விபரம் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே தெரிவிக்கப்படும். ஆனால் அன்னார் தேர்வாணையத்தின் விளம்பர எண்.16/93-ல் கண்டுள்ள பதவிகளுக்கோ அல்லது விளம்பர எண்.26/93-ல் கண்டுள்ள பகிரங்க போட்டியின் கீழுள்ள நான்கு நகராட்சி ஆணையர் நிலை-3 பதவிகளுக்கோ விண்ணப்பித்திருப்பின் தேர்வாணையத்தால் 8.1.94 அன்று நடத்தவிருக்கும் முதனிலைத் தேர்வு (Preliminary) எழுத வேண்டும்.

DIPR/2141/MS/93

# மக்களை ஒன்றுபடுத்தும் பெரும் சக்தியைக் கொண்டது 'இசை':



## இசை விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ் இசைச் சங்கத்தின், 51-வது ஆண்டு விழாவினைத் துவக்கி வைத்து, நாதசுர இசை வல்லுநர், டாக்டர் ஷேக் சின்ன மௌலானா அவர்களுக்கு 'இசைப் பேரறிஞர்' பட்டத்தை வழங்கியதில் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

தமிழ்கூறும் நல்லுலகம் முழுமையும் மகிழும் வண்ணம், சென்ற ஆண்டு பொன் விழாவினைக்





கண்டு, தனது ஐம்பத்து ஒன்றாவது ஆண்டில், பெருமிதத்துடன் நடைபோடும் 'தமிழ் இசைச் சங்கம்', தொன்மையும் பாரம்பரியமும் வாய்ந்த தமிழ் இசையைப் போற்றிப் பாதுகாக்க ஆற்றி வரும் தொண்டு, பாராட்டுக்கு உரியதாகும். பாரெங்கும் பரவியிருக்கும் தமிழ்ச் சமுதாயத் தினருக்கு, தமிழ் உணர்வோடு, இன்னிசைக் கலை உணர்வையும் ஊட்டி, தமிழ் மொழியின் இசைச் செல்வத்தை, வாழையடி வாழையாகத் தமிழர்கள் அனைவரும் அனுபவித்து, இன்புற உதவிடும் ஓர் 'இசைக்கோயில்' தான், இந்தத் 'தமிழ் இசைச் சங்கம்'.

*1943*-ஆம் ஆண்டு, செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் இசை மறுமலர்ச்சியில் நாட்டம் கொண்ட, சில தமிழ் அறிஞர்களோடு இணைந்து துவக்கி வைத்த 'தமிழ் இசைச் சங்கம்', இசை நிகழ்ச்சிகளை நடத்தி, மக்களை மகிழ்விக்கின்ற ஒரு சாதாரண அமைப்பாக மட்டும் இல்லாமல், தமிழ் மொழி யின் மேன்மையையும், தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுச் செழுமையையும், தன்னிகரற்ற இசைத் தமிழின் பெருமையையும், உலகிற்கு உணர்த்தும் ஓர் எழுச்சி மிகு, இசை இயக்கமாக வளர்ந்துள்ளது.

இன்று விழா நடைபெறும் இந்த 'ராஜா அண்ணாமலை மன்றம்', தமது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்து, 'தமிழ் இசை' வேள்வி நடத்தி வந்துள்ள, எண்ணற்ற தமிழிசைச் சான்றோர்களின் உணர்வுக்கும், எழுச்சிக்கும், இன்றும் ஒரு சரித்திரச் சான்றாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

பிறமொழி ஆதிக்கத்தில் மயங்கி, பண்பாட்டுத் தடுமாற்றங்களினால், தள்ளாடிக் கொண்டிருந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, அவர்களின் உணர்வுகளுக்குள் உறங்கிக் கிடந்த, உயரிய 'தமிழ் இசையை' உயிர்ப்பித்து, நமது பாரம்பரியமிக்க தமிழ்ப் பண்பாட்டிற்கு, எவ்வித ஊறும் நேராத வகையில், பாதுகாத்து வந்துள்ள பெருமக்களுக்கு, நமது நன்றியை இந்த நேரத்தில் உரித்தாக்கிக் கொள்வது, நமது கடமை என்று கருதுகிறேன்.

கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாகப் பல அறிஞர்களும், இசை மேதைகளும், தமிழ் இசைச் சங்கத்தில், கருத்துச் செறிவு மிக்க விழாப் பேருரைகளை நிகழ்த்தி நமது சிந்தனைக்கு விருந்தளித்துச் சிறப்பித்துள்ளார்கள். தமிழ் இசையின் உயிர் நாடியாக விளங்கும், புகழ்மிக்க 'ராஜா அண்ணாமலை மன்றத்தில்', ஆன்றோர் களும், சான்றோர்களும், இசை வித்தகர்களும் குழுமியுள்ள இந்த மாமன்றத்தில், தமிழிசையின் பெருமை குறித்தும், இசை பற்றிய எனது பொது வான கருத்துக்களையும், உங்களோடு பகிர்ந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இசையினால் ஈர்க்கப் படாதவர் எவரும், மனித வாழ்வில் சிறந்த பண்புகள் பலவற்றை, முழுமையாக உணர இயலாதவர்கள், என்பதே எனது கருத்து. மனித இனத்தையே தன்னுடைய நாத வெள்ளத்தால், கட்டுண்ட நிலையில் வைத்திருக்கும், இசையின் உண்மையான குறிக் கோள் குறித்து, பல அறிஞர்கள் விளக்கங்கள் அளித்திருந்தாலும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ''இசை என்பது, மக்களி டையே இசைவை ஏற்படுத்த வல்ல ஓர் உணர்வு''

என்று கூறிய கருத்தை, நான் நினைவுபடுத்தி மகிழ்கிறேன்.

மனம், வாக்கு, காயம் என்கிற மூன்று உயிர் நிலைகளையும் அமைதிப்படுத்தி, அவற்றை 'இசைவு' கொள்ளத்தக்க, நிலையை, உருவாக்கும் ஆற்றல் படைத்ததுதான் 'இசை' என்ற கருத்தை, நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

ஆகவே, மக்களை ஒற்றுமைப்படுத்தும் பெரும் சக்தியைத் தன்னகத்தே கொண்ட 'இசை'யினை, மொழி என்ற ஒரு சிறு வட்டத்துக்குள் அடைத்து விடக் கூடாது; இசைக்கு மொழி என்ற எல்லை கிடையாது என்ற பொதுவான கருத்தை ஒப்புக் கொள்ளும் நாம், அதே நேரத்தில், மொழி இல்லாமல் இசை இயங்க இயலும் என்ற கருத்தை யும், முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது.

ஆகவே, மொழியோடு கூடிய இசை, மக்களை ஒன்றுபடுத்தி, அவர்களிடையே 'இசைவு' ஏற்படத் தக்க சூழ்நிலையை உருவாக்குகின்றது என்பது, சரித்திரம் காட்டும் உண்மை அல்லவா?

தமிழ் இசை இயக்கம், தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தில், வெறும் ஒலியோடும் கூடிய இசையே, பிற மொழிப் பாடல்கள் வாயிலாக, பாடப்பெற்று வந்தது. பின்னர் செயற்கையான இந்த நிலை மாறி, மொழியோடு கூடிய இசையை, இசைப்போரும் கேட்போரும், பொருள் உணர்ந்து ரசித்து மகிழும் ஒரு நல்ல நிலையைத் தமிழ் நாட்டின் இசையரங்குகளில், ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, இந்த இயக்கத்திற்கு உண்டு.

இன்றைக்குக் 'கர்நாடக சங்கீதம்' என்ற பெயரால், வழங்கப் பெற்று வரும் இசை மரபு, இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே, வளர்ச்சியுற்ற இசை வடிவமாகத் திகழ்ந்த, 'தமிழ் இசை'யின் தற்கால வடிவமே என்பது, பல ஆன்றோரின் கருத்து. ஏனென்றால், தமிழ் மொழியின் இலக்கியச் செறிவுக்கு, எப்படி ஒரு நீண்ட, நெடிய வரலாறு உண்டோ, அப்படியே, இசைத் தமிழுக்கும் நீண்டதொரு பாரம்பரியமும், செழுமையான வரலாறும் உண்டு என்பதை, பழந்தமிழ் இலக்கியங்கள், நன்கு எடுத்துக் காட்டுகின்றன. வேறு எந்த மொழியிலும் இல்லாத சிறப்பு, தமிழ் மொழிக்கு உண்டல்லவா!

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று, மொழியை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து, மொழியோடு இசையை, ஒன்றச் செய்த பாங் கினை, நினைத்து நினைத்து மகிழ வேண்டிய வர்கள் நாம். 'தொல்காப்பியம்' முதற்கொண்டு, எண்ணற்ற சங்ககால இலக்கியங்கள், 'முத்தமிழ்க் காப்பியம்' என்று புகழப்படும், 'சிலப்பதிகாரம்' போன்ற, காலத்தால் அழியாத காப்பியங்கள், இன்றும் தமிழிசையின் பெருமையினை உணர்த்து கின்றன.

இடைக்காலத்தில் நாயன்மார்களால் பாடப் பெற்ற தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமறைகளும், வைணவ நெறியைச் சார்ந்த, சமயப் பெரியோர்களாகிய, ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்விய பிரபந்தம், போன்ற வைணவப் பாடல் தொகுப்புகளும், தமிழ் இசையைப் போற்றி வளர்த்து, தமிழ் மொழியில், தமிழ் இசையில் உள்ள தெய்வீகத்தை நமக்கு அளித்து உள்ளன.

அதன் பின்னர், அருணகிரிநாதர் அருளிய, ஓசை நயம் கொண்ட 'திருப்புகழ்', இராமலிங்க அடிகளார் படைத்த 'திருவருட்பா', மற்றும் அருணாசலக் கவிராயர், திரிகூடராசப்ப கவி ராயர், போன்றவர்கள் இயற்றிய இசைப் பாடல்கள், அண்மைக்காலத் தமிழ் இசை வளர்ச்சிக்குச் சான்றுகள் ஆகும்.

அதே போன்று, தற்காலத் தமிழ் இலக்கிய மரபில், வேதநாயகம் பிள்ளை, மகாகவி பாரதியார், கோபாலகிருஷ்ண பாரதி, சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், பாவேந்தர் பாரதி தாசன் போன்றோர், தங்களது உணர்ச்சியூட்டும் கவிதைகளால், தமிழிசை மரபினைத் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் தமிழ் இசை வழக்குகள், இன்று 'கர்நாடக இசை'யில்

## கருணை அடிப்படையில் முதல்வர் நிதியுதவி

சென்னையிலுள்ள தனியார் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வரும், திரு. ஜான் ஆல்பிரட் தன்னுடைய மகனான திரு. அஜித் ஆல்பிரட் என்பவர் சிறுநீரகக் கோளாறு மற்றும் கல்லீரல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுத் துன்புற்று வரு கிறார் என்றும், அவருக்குச் சிறு நீரகம் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெளிநாட்டில் தான் மேற்கொள்ளப்பட்ட வேண்டும் எனவும், அதற்குத் தக்க நிதியுதவி கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களுக்குக் கருணை மனு ஒன்றினை அனுப்பியிருந்தார். மனுதாரரின் கோரிக்கையைப் பரிவோடு பரி சீலனை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திரு. அஜித் ஆல்பிரட்டுக்குத் தேவையான மருத் துவச் சிகிச்சையை மேற்கொள்ள உதவும் பொருட்டு, கருணை அடிப் படையில் ரூ.50,000/-. நிதியுதவி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

பின்பற்றிவரும் இசை வழக்குகள் போன்றே விளங்குவதை இசை பயின்றவர்கள் நன்கு அறிவார்கள்.

ஆராய்ச்சியாளர்கள், பிறமொழிகளின் செல்வாக்கின் காரணமாகப் பிற மொழிப் பாடல்கள் அதிக அளவில் இயற்றப்பட்டு, அவையும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட, தமிழ் இசை மரபுகளாலேயே, பாடப் பெற்று வந்தன என்றும், 'தமிழிசை' என்பது, தமிழோடு இசைக்கும் பண் என்பதால், புதிதாக ஏற்பட்ட இசை மரபிற்குக் 'கர்நாடக இசை' என்ற புதுப் பெயர் கிடைக்கப் பெற்றதாகச் சுட்டிகாட்டுகிறார்கள்.

எனவே, 'தமிழ் இசை' மரபு என்பது, இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே, இசைத் தமிழ் வடிவங்கள், எழுதப்பட்ட இலக்கியங்கள், வாய்மொழியால் வழங்கப்பட்ட பாடல் இலக்கியங்கள், ஆகியவற்றின் மூலம், வழி வழியாக வழங்கப் பெற்று வந்துள்ளது, என்ற உண்மையை அறிந்து, நாம் மகிழ்ச்சி கொள்ளலாம். காலப்போக்கில், பிறமொழிப் பாடல்களும், அதிக அளவில் இசைக்கப்பட்டாலும், அம்மொழிகளைச் சார்ந்த சிறப்பான சாகித்தியங்களும், கீர்த்தனைகளும், அப்பாடல்களை இசைப்போரும், கேட்போரும், அவற்றின் பொருளறிந்து, உண்மையான இசையின்பத்தை அடையமுடியாத சூழ்நிலையில், 'தமிழ் இசை இயக்கம்' என்ற மறுமலர்ச்சி இயக்கம் துவங்கி, தமிழ் இசை மீண்டும் தழைத்தோங்க வித்திட்டது.

தமிழ் இசையை வளர்த்து, அதன் பெருமைமிக்க பாரம்பரியத்தை, வருங்காலத் தலைமுறையினருக்கு விட்டுச் செல்லும் பணியில், தமிழ் கூறும் நல்லுலகம் ஈடுபடும்போது, பிற மொழிப் பாடல்களைப் புறக்கணிப்பதாகப் பொருளாகி விடாது. எல்லா இசை மரபுகளும் அதன் சிறப்பம்சங்களுடன், காப்பாற்றப்பட வேண்டும் என்பதே, நமது நோக்கமாக இருக்கவேண்டும்.

தமிழ் இசைச் சங்கம், அறிஞர்களுக்கும், தமிழ் இசை வல்லுநர்களுக்கும், 'இசைப் பேரறிஞர்' பட்டங்களை, ஆண்டுதோறும் வழங்கிச் சிறப்பிக்கும், பெருமைக்குரிய மரபினைப் பின்பற்றி வருகிறது. இந்த ஆண்டு, நாதஸ்வர இசை மேதை, டாக்டர் ஷேக் சின்ன மௌலானா அவர்களுக்குத் தமிழ் இசைச் சங்கத்தின், 'இசைப் பேரறிஞர்' பட்டத்தினை வழங்கி, அவரைச் சிறப்பிக்கும் நல்வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அவருடைய தலைமை உரையில் அரசு விழாக்களில் முக்கிய நிகழ்ச்சியாக நாதஸ்வர இசை இடம் பெற வேண்டும் என்று தன் விருப்பத்தை இங்கு எடுத்து வைத்தார். இதைக் கருத்தில் கொண்டு, இனி தமிழ்நாட்டில் நடைபெறும் அரசு விழாக்களில் முதல் நிகழ்ச்சியாக நாதஸ்வர இசை இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**— சென்னையில், 'தமிழ் இசைச் சங்க'த்தின் 51-வது ஆண்டு விழாவைத் துவக்கிவைத்து ஆற்றிய உரை.**


**தமிழரசு**

**புதிய சந்தா விவரம்**

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

**தமிழரசு**

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



## ஆதிதிராவிட விவசாயிகள் பாசன வசதிபெற நிதிஉதவி

ஆதிதிராவிடப் பெருமக்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழக அரசு தற்போது ஆதி திராவிட விவசாயிகள் தங்கள் நிலங்களில் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்ள, குழாய்க் கிணறுகள் (Tube Wells), ஆழ குழாய்க் கிணறுகள் (Bore Wells) அமைத்தல் மற்றும் கிணறுகளை ஆழப்படுத்துதல் (Deepening of Wells) போன்றவற்றை மேற்கொள்ளும் போது அதற்கு 50 சதவிகிதம் மானிய நிதி உதவி வழங்க வேண்டு மென மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தின் மூலம் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 1993-94-ஆம் நிதி ஆண்டில் விரைந்து செயல்படுத்த வேண்டுமென ஆணையிட்டுள் ளார்கள். இந்த 50 சதவிகித மானியத் தொகை கீழ்க்கண்ட பணிகளுக்கு வழங்கப்படும்:

1. நிலத்தடி நீர் ஆய்வு செய்வ தற்கான கருவிகளின் வாடகை;

2. கிணறு அமைப்பதற்கு உத் தேசிக்கப்பட்டுள்ள இடத்தை ஆய்வு செய்வதற்குரிய செலவு;

3. உபகரணத்தைக் கொண்டு செல்ல ஆகும் போக்குவரத்துச் செலவு;

4. கிணறு அமைப்பதற்குத் தேவை யான தொழிலாளர்களின் கூலி மற்றும் மூலப்பொருட்களுக்கு ஆகும் செலவு;

5. டீசலுக்கான செலவு;

6. எலக்ட்ரானிக் சர்வே செய்வ தற்கான வாடகை;

7. பைப்புகள் அமைப்பதற்கான செலவினம்;

8. கிணறுகளை ஆழப்படுத்து வதற்கான செலவினம்;

9. கிணறுகளைத் தூய்மைப்படுத் துவதற்கான செலவினம்

ஆதிதிராவிடப் பெருமக்களின் நலன் கருதி இந்தத் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டு மென இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தும் அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறி வுறுத்தியுள்ளார்கள்.

## புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குக் கூடுதல் மண்ணெண்ணெய்

அண்மையில் தமிழகத்தில் ஏற் பட்ட புயல், பெருமழை, வெள்ளம் ஆகியவற்றின்போது பல்வேறு கடலோர மாவட்டங்களில் மின் சார்த்தால் உயிர்ச் சேதங்கள் ஏற்படாமல் தடுக்க, முன் எச் சரிக்கை நடவடிக்கையாக மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாலும், புயல்—சூறாவளிக் காற்றால் சில இடங்களில் மின் இணைப்புச் சாதனங்கள் சேதமடைந்ததால், மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாலும், இந்த மாவட்டங்களில் மண்ணெண் ணெயின் தேவையும், உபயோகமும் அதிகமாகிவிட்டது. இந்தச் சூழ் நிலையில் தமிழகத்திற்கு இயல்பாகக் கிடைக்கும் மண்ணெண்ணெயின் அளவைக் கொண்டு நமது தேவை யைப் பூர்த்தி செய்ய இயலாது என்ற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அதிகமான மண்ணெண்ணெயைத் தமிழகத்திற்கு உடனடியாக வழங்க வேண்டுமென மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, மத்திய அரசு டிசம்பர் மாதத்திற்கு மட்டும் தமிழகத்திற்குக் கூடுதலாக 6,400 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. கூடுதலாக ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய் தேவைப்படும் கடலோர மாவட்டங் களுக்கு விநியோகம் செய்யப்பட்டு அம்மாவட்டங்களின் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட் டுள்ளார்.

### அந்தநாள் ஞாபகம்!

**மகாத்மா காந்தியடிகள் - *1919, 1921, 1927, 1934, 1946* ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ஐந்து முறை மதுரை மாநகருக்கு வருகை தந்திருக்கிறார்.**

**அப்படி ஒருமுறை வந்திருந்த போதுதான், உடுத்தக்கூட போதுமான உடையின்றி வாழும் ஏழை எளிய மக்களைக் கண்டு மனம் நொந்த அவர், தாமும் முழங்கால் வரை துண்டணிந்து 'அரையாடைப் பக்கிரி' என்றே குறிப்பிடப்படுபவராக மாறினார்.**

## சிறிய மிகச்சிறிய விவசாயிகளுக்கு மானியத்தோடு இணைந்த கடன் உதவி



தமிழ் நாட்டிலுள்ள சிறிய, மிகச்சிறிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் வேளாண்மைத் தொழில் புரிவதற்காகச் சொந்தமாக டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும் வாங்கி உபயோகிப்பதை ஊக்குவிக்கும் வண்ணம் சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுக்கு மானியத்தோடு இணைந்த கடன் உதவி வழங்கும் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் 1993-94-ஆம் நிதி ஆண்டில் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு 1,000 சிறு டிராக்டர்களையும் (small tractors), 1,000 பவர் டில்லர்களையும் (power tillers) வாங்குவதற்கு மானியமும், கடன் உதவியும் வழங்கப் படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 4.5 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப் படும் தகுதியான சிறிய- மிகச்சிறிய விவசாயிகளுக்குச் சிறிய டிராக்டர்கள் (small tractors) வாங்குவதற்குக் கடன் உதவியும், அரசுத் தரப்பில் 30,000 ரூபாய் மானியத் தொகையும் வழங்கப்படும். அதே போல் தெரிந்தெடுக்கப்படும் சிறிய, மிகச்சிறிய விவசாயிகளுக்குப் பவர் டில்லர்கள் (power tillers) வாங்குவதற்குக் கடன் உதவியுடன் அரசு மானியமாக 12,000 ரூபாயும் வழங்கப்படும்.

தகுதியான சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளை விரைவில் தெரிந்தெடுத்து அவர்களுக்குக் கடன் உதவியும், மானியத் தொகையும் வழங்கி மொத்தம் 1,000 சிறு டிராக்டர்களையும், 1,000 பவர் டில்லர்களையும் இந்த நிதி ஆண்டுக்குள் வாங்கி வழங்கவேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் ரூ.50 கோடி ஒதுக்கீடு:

கடந்த 2 மாதங்களாகப் புயல், பெரு மழை மற்றும் வெள்ளம் ஆகியவற்றால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்யும் பணியையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பணியையும் இன்று (15.12.1993) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்டராமன் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வு செய்தார்கள்.

சேதமடைந்த பாலங்கள், நீர் நிலைகள், மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பணியையும், மராமத்துப் பணியையும் மேலும் துரிதப்படுத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். ஏற்கெனவே இந்த மராமத்து மற்றும் செப்பனிடும் பணிகளுக்கு நவம்பர் மாதம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 கோடி ரூபாய் போக, தற்போது கூடுதலாக மேலும் 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கினார்கள். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 கோடி ரூபாயில் 15 கோடி ரூபாய் பயிர் சேதம் அடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவியாக இடுபொருள்களான விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்தார்கள்.

சாலைகள் மழை வெள்ளத்தாலும், புயலால் மரங்கள் விழுந்ததாலும் பாதிக்கப்பட்டு உள்ளதால், அவற்றை உடனடியாகச் சீர்செய்வதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். அதேபோன்று, ஏரிகள், குளங்கள் மற்றும் நீர் நிலையில் ஏற்பட்டுள்ள சேதங்களை மராமத்து மற்றும் பழுதுபார்க்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

நிதி ஆதாரமின்றிப் பல பேரூராட்சிகளில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் சிறிய நீர் ஆதாரங்களில் செப்பனிட இயலாத சூழ்நிலை உள்ளதால் அத்தகைய சாலைகள் மற்றும் நீர்நிலைகளைச் செப்பனிடப் பேரூராட்சிகளுக்கு 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

தற்போது கூடுதலாகத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில் மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 60 கோடி ரூபாயை விரைவில் செலவிட்டு அனைத்து மராமத்துப் பணிகளையும் செப்பனிடும் பணிகளையும் காலதாமதமின்றி மேற்கொள்ளவேண்டுமென்றும் தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மதுரை மாவட்டம்:

# மக்களால் மதிக்கப்படும் மகளிர் காவல் நிலையங்கள்



மதுரையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 14.7.'93 அன்று திறந்து வைக்கப்பட்டது. இது மாநிலத்தில் தொடங்கப்பட்ட இரண்டாவது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும். இந்த மகளிர் காவல் நிலையத்தில் ஒரு பெண் ஆய்வாளர், இரு உதவி ஆய்வாளர்கள், இரு தலைமைக் காவலர்கள் மற்றும் 18 காவலர்கள் பணியாற்றிவருகிறார்கள்.

காவல் நிலையத்துக்குக் கொண்டு வரப்படும் குற்றவாளிகளைக் கவனிப்பதோடு மட்டுமன்றி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டக் கருவூலம் (Treasary), வங்கிகள் போன்ற இடங்களில் பணியிலிருக்கும் பாதுகாவலர்களைக் கண்காணிப்பது, வாகனங்கள் பரிசோதனை போன்ற பணிகளிலும் தமது மகளிர் பிரிவுக் காவலர்கள் ஈடுபடுவதாகக் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. எச். மாலதி நம்மிடம் தெரிவித்தார்.

இவர் மாநிலத்திலேயே முதல் பெண் ஆய்வாளர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மாநிலத்திலேயே இரவு நேரங்களில் பெண் காவல்துறை அலுவலர்கள் ரோந்து சுற்றி வருவதும் இங்குதான்.

''அப்படிச் செல்லுகிற உங்களை, வண்டி வாகனங்களில் போவோர் உதாசீனப்படுத்திவிட்டு, நில்லாமலே போய்விடுகிறார்கள் என்று ஒரு பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தார்களே''?— என்று நாம் கேட்டோம்.

''அதை நானும் பார்த்தேன்; அப்படிச் சொல்லுவது தவறு. நாங்கள் நிறுத்தியும் நில்லாமல் காரை ஓட்டிச் செல்லுபவர்களை நாங்கள் துரத்திப்போய் பிடித்ததுண்டு; நிறுத்தி விசாரிக்கிறபோது 'அம்மா நான் குடித்திருக்கிறேன்... பெண் போலீஸ்கிட்ட மாட்டினா அவமானமாச்சேன்னு நிறுத்தலியே தவிர வேற இல்லே'ன்னு அந்த ஆசாமிங்க அசடு வழியறது எங்களுக்குத்தானே தெரியும்!''— என்று அவர் பதில் சொன்னார்.

இந்தக் காவல் நிலையம் தொடங்கி நான்கு மாதங்களிலேயே ஒரு கற்பழிப்பு வழக்கு, கடத்தல் குற்றங்கள் 2, வரதட்சணைக் கொடுமை வழக்கு 2 தவிர குடும்ப தகராறு சம்பந்தப்பட்ட ஏராளமான வழக்குகளும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த ஒரு மாதத்திலேயே 36 வழக்குகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

மகளிருக்கென்றே தனியாகத் தொடங்கப்பட்ட இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையம் பற்றி கருத்து கேட்டதற்கு, இது மாண்புமிகு முதல்வர் அவர்களின் அருமையான திட்டம் என்றும், இத்தகைய காவல் நிலையங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டால் பெண்களுக்கு மிகுந்த பயன் தருவதாக இருக்கும் என்றும் தெரிவித்தார் ஆய்வாளர் திருமதி. மாலதி.

இவர் மேலும் கூறுகையில், இத்தகைய மகளிர் காவல் நிலையங்களுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு அதிகம் இருப்பதாகவும், காவல் துறை மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு மட்டும் பரிபூரணமாக இருந்தால் இன்றும் திறம்படச் செயல்பட்டு, முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் எந்த நோக்கத்திற்காக இந்தக் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டனவோ அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்ய முடியும்'' என்றும் தெரிவித்தார், திருமதி. மாலதி. —ஜே.சி.



# சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

*1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)*

*1 இரண்டாவது பரிசு* - *அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு*

*2 மூன்றாவது பரிசுகள்* - *கலர் டெலிவிஷன்*

*2 நான்காவது பரிசுகள்* - *உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்*

*3 ஐந்தாவது பரிசுகள்* - *2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா*

*10 ஆறாவது பரிசுகள்* - *1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்*

*600 ஏழாவது பரிசுகள்* - *ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்*

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- **இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)**
- **கிசான் விகாஸ் பத்திரம் (KVP)**
- **தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)**
- **தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)**
- **15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)**
- **மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)**
- **ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்**
  **1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)** **1% ஊக்கத்தொகை**
- **3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)**
  **அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)**

**மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)**

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

**வெளியீடு: இயக்குநர்,**
**சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,**
**சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685**
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/884/DIS/93

# இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



# நிலவளத்துக்கு ஒரு வங்கி

வேளாண்மை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் நிலவள வங்கிகளின் தலைமை நிறுவனமாகத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி அமைந்துள்ளது. 1929-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற இந்த நிறுவனத்துக்கு, மாவட்ட அளவில் தற்போது 20 கிளைகள் உள்ளன. வட்டார அளவிலும், வட்ட அளவிலும் 181 தொடக்க நிலவள வங்கிகள் தமிழகமெங்கும் பரவலாக அமைந்துள்ளன. இத்தொடக்க நிலவள வங்கிகள், மாநில நிலவள வங்கியுடன் இணைந்த முறையில் செயல்பட்டு வருகின்றன.

இவ்வங்கிகள், தொடக்க காலத்தில் விவசாயிகளுக்குக் கடன் சுமையிலிருந்து நிவாரணம் அளிக்க, அதாவது அபிவிருத்தித் திட்ட இனத்தைச் சாராத வற்றிற்குக் கடன்களை வழங்கி வந்தன. நாட்டில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டதையொட்டி, நிலத்தைப் பண்படுத்துதல், சிறுபாசனத் திட்டங்கள் மற்றும் பண்ணை இயந்திர மயமாக்கல் ஆகிய அபிவிருத்தி நிலவள வங்கிகள் கடன்களை வழங்கத் தொடங்கின. இந்தப் பரிமாணத்தையொட்டி "நில அடமான வங்கிகள்" 1969-ஆம் ஆண்டில் "நிலவள வங்கிகள்" என்ற பெயரைப் பெற்றன. நிலத்தை ஈடாகக் கொண்டு கடன்களை வழங்கிவந்த நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவி புரிகின்ற நோக்கத்தோடு, நிலத்தைச் சாராத கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு போன்ற தொழில்களை அவர்கள் நடத்துவதற்கு நிலத்தை ஈடாகக் கோராமலே அரசு அளிக்கின்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் கடன்களை வழங்கி வருகின்றன.

சிறு பாசனப் பணிகளுக்கு வாய்ப்புகள் குறைந்து வருவதையொட்டி, நிலவள வங்கிகள் நம்முடைய பணிகளைப் பல்வேறு வகையான புதிய துறைகளில் விரிவுபடுத்த ஆரம்பித்தன. இதையொட்டி விவசாயிகளின் வாழ்க்கை நிலையினை உயர்த்தக்கூடிய கறவை மாடுகள் வாங்குவதற்கும், ஆடு வளர்ப்புக்கும், டயர் வண்டி மாடுகள் வாங்குவதற்கும், கோழிப்பண்ணை அமைத்துக் கொள்வதற்கும், கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1990-91 நிதி ஆண்டிலிருந்து கருமான் தொழில், காலணி தயாரிப்பு, மட்பாண்டங்கள் தயாரிப்பு, காகிதப் பொருட்கள் முதலான குடிசைத் தொழில்கள் மற்றும் கிராமக் கைவினைஞர்களுக்குக் கடன் வழங்குதல் போன்ற பண்ணை சாரா சிறுதொழில் கடன்களும் வழங்கப்படுகின்றன. கிராமப்புற வீட்டு வசதிக்கும் கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### நிதி வசதி நிலவரப்படி

மாநில நிலவள வங்கியின் சொந்த நிதி வசதி, பங்கு-மூலதனமும் பல்வேறு ஒதுக்கீடு நிதிகளுமாகச் சேர்ந்து மொத்தம் ரூ.7,073.86 இலட்சம் அளவுக்கு உள்ளது. கடன் தருவதற்குத் தேவைப் படும் நிதியில் பெரும் பகுதி கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் திரட்டப்படுகிறது. சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் மாநில, மத்திய அரசுகளும், இதர நிறுவனங்களும் முதலீடு செய்கின்றன. சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களில் வேளாண்மை மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான தேசிய வங்கி (NABARD)யும், மத்திய மாநில அரசுகளும் முதலீடு செய்கின்றன. 31.3.93-ஆம் தேதிய நிலவரப்படி, கடனீட்டுப் பத்திரங்களின் மொத்த நிலுவை ரூ.208.51 கோடி ஆகும்! சிறப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்காக வெளியிடப்பட்ட சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களில், 31.3.93-ஆம் தேதி நிலவரப்படி ரூ.153.32 கோடி நிலுவையில் இருக்கிறது. மேற்கண்ட சிறப்பு வளர்ச்சிக் கடனீட்டுப் பத்திரங்களில் நாபார்டும், இந்திய அரசும், மாநில அரசும் முதலீடு செய்துள்ளன.

### கடன் வழங்குதல்

வழக்கமான சிறுபாசனக் காரியங்களுக்குக் கடன் வழங்குவது நீங்கலாக நிலவள வங்கிகள் தமது கடன் வழங்கு அலுவல்களைப் பால் பண்ணை அபிவிருத்தி, ஆடு வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன் வள அபிவிருத்தி, கோழிப்பண்ணை போன்ற புதிய துறைகளுக்கும் விரிவுபடுத்தியது. நில அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளோடு விவசாயம் சார்ந்த கால்நடைப் பராமரிப்பு, மீன்வள அபிவிருத்தி, தேனீ வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு போன்ற எல்லாத் தொழில்களுக்கும் கிராமப்புற மக்களுக்கு நிலவள வங்கிகள் கடன்களை வழங்க வகை செய்யும் முறையில் 1934-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டம் 1979-ஆம் ஆண்டு மே மாதத்தில் திருத்தப்பட்டது. மேலும், அடமானங்களில் ஈடு இல்லாமல் அரசாங்க உத்தரவாத அடிப்படையில் கழகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார்கள் ஆகியோருக்கும் சொத்து போன்ற பிணையம் கொடுக்க முடியாத நிலையில் உள்ள நலிந்த பிரிவினருக்கும் கடன் வழங்க மற்றொரு சட்டத் திருத்தத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டது.

மேலும் விவசாய வளர்ச்சி, விவ

சாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பல்வேறு பணிகளுக்கான சொந்த நிலமில்லாத நபர்களுக்கு, தொடக்க நிலவள வங்கிகள் மத்திய காலக் கடன் தருவதற்காக, அரசு 6 கோடி ரூபாய் அளவுக்கு உத்தரவாதம் தந்து மேற்குறிப்பிட்ட நபர்களிடமிருந்து அடமானம் எதுவும் கோராமல் அரசின் உத்தரவாத அடிப்படையில் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்களை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*1963*-ஆம் ஆண்டு விவசாய மறு நிதிக் கழகமாக அமைக்கப்பட்ட வேளாண்மை மற்றும் கிராமிய அபி விருத்திக்கான தேசிய வங்கி *31.3.93* வரை மொத்தம் ரூ.*255.53* கோடி அளவுக்கு *1367* திட்டங்களுக்கு வழங் காணை பிறப்பித்திருக்கிறது.

**பண்ணை சாராத் தொழில் கடன்:**

வேளாண்மை மற்றும் கிராமிய அபி விருத்திக்கான தேசிய வங்கி தனது மறு நிதி உதவியிலிருந்து வழங்கப்படும் பண்ணை சாராத் தொழில்களுக்கான கடன்கள், கிராமப்புற கலைஞர்கள் கைவினைஞர்கள் மற்றும் சிறுதொழில் புரிவோர் ஆகியோருக்கும் கூடை புனைதல் மற்றும் சின்னஞ்சிறிய கிராமத் தொழில்கள் உட்பட சிறுதொழில் வளர்ச்சி ஆணையரால் ஒப்புதல் அளிக் கப்பட்ட பல்வேறு தொழில்களுக்கும் மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி *1990-91*-ஆம் ஆண்டில் *191-38* இலட்சமும் *1991-92*-ஆம் ஆண்டில் *383.79* இலட்சமும், *1992-93*-ஆம் ஆண்டில் *1551.50* இலட்சமும் கடன் களாக வழங்கப்பட்டுள்ளன.

**தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் விவசாயிகள் நிலம் வாங்கக் கடன்:**

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதியின் சிறுவிவசாயிகட்கும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கட்கும் நிலம் வாங்குவதற் காகக் கடன் வழங்க 'தேசிய தாழ்த்தப் பட்ட மற்றும் மலை வாழ்மக்கள் நிதி யுதவி மற்றும் வளர்ச்சிக் கழகம் முன் வந்துள்ளது. அதன்படி, ரூ.*195* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் *1300* விவசாயிகட்கு *1000* ஏக்கர் அளவு நிலம் வாங்க நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத் தின்படி, *0.50* ஏக்கரிலிருந்து *1.00* ஏக்கர் வரை நிலம் வாங்க ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.*10,000* கடனாகவும் ரூ.*5,000* மானியமாகவும் வழங்கப்படும். இத்திட்டம் தற்போது எல்லா மாவட்டங் களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



**பண்பாடென்பது...**

● எவ்வளவு கல்வியும்
செல்வமும் இருந்தாலும்,
அடக்கம் இல்லாவிடில்
பண்பாடென்பது இல்லை.

— மூதறிஞர் இராஜாஜி

**கிராம வீட்டுவசதி**

நிலவள வங்கிகள் *1993-94*-ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டுவசதிக் கடன்களை வழங்கவும் திட்டமிட்டு வருகிறது. தேசிய வீட்டுவசதி வங்கியின் அனுமதி கிடைத்தவுடன் நிலவள வங்கிகள் வீட்டுவசதிக் கடன்களையும் வழங்கும்.

**அரசு உதவி:**

கடன் வசூல் நிலவரம் திருப்திகரமாக இல்லாததையொட்டியும் வங்கியின் சிரம மான நிதிநிலையைக் கருத்திற்கொண்டும் மாநில அரசு அவ்வப்பொழுது தக்க நிதி யுதவியை மாநில நிலவள வங்கிக்கு வழங்கி உதவி புரிந்துள்ளது.

*1990*-ஆம் ஆண்டு தமிழக அரசால் உருவாக்கப்பட்ட வேளாண்மை மற்றும் கிராமியக் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ், பிரதம நிலவள வங்கிகளில் பெற்ற கடன்களைக் கட்டத் தவறியவர்கள் *2.10.'89* நிலவரப்படி கணக்கெடுக்கப் பட்டு, மொத்த நிலுவையில் ரூ.*10,000* அளவுக்கு *1,63,669* விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டது. இதன்படி வங்கிக்கு அரசு ரூ.*73.61* கோடி செலுத்த வேண்டியிருந்தது. இதுவரை மத்திய மாநில அரசுகளிடமிருந்து சுமார் ரூ.*62.69* கோடி வங்கி பெற்றிருக்கிறது.

**பொய்த்த கிணறுகள் நிதி:**

நிலவள வங்கிகளில் கடனுதவி பெற்று வெட்டப்படும் கிணறுகளில் தண்ணீர் கிடைக்காமல் பொய்த்துப் போகுமானால் அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்காக 'பொய்த்த கிணறுகள் நிதி' ஒன்றை மாநில நிலவள வங்கி பராமரித்து வருகிறது. மாநில நில வள வங்கி உருவாக்கியுள்ள இந்த 'பொய்த்த கிணறுகள் நிதி'க்கு வங்கியின் நிகர ஆதாயத்தில் 10 சதவிகிதம் ஒதுக்கப் படுகிறது. மேலும் அரசின் பங்கு மூல தனத்துக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதத்தின்படி தரத்தக்க இலாப பங் கீட்டுக்கு மேற்பட்ட அளவில் *50* சதவிகி தத்தை அரசின் பங்காக ரூ.*1* கோடியை இந்நிதிக்கு அரசு செலுத்தியிருக்கிறது.

பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவி என்பது *1.4.1968* அன்றோ அதற்கு பிறகோ புதிய கிணறுகள் தோண்டுவதற்காக வாங்கப்பட்டு வெட்டப்பட்ட கிணறுகள் பொய்த்துப் போனால் அத்தகைய கடன்தாரர் களுக்குப் 'பொய்த்த கிணறுகள் நிதி யிலிருந்து உதவி வழங்கப்பட்டு வருகிறது. நிதியிலிருந்து கிடைக்கக் கூடிய உதவி என்பது மானியத்தின் அளவு, செய்து





முடிக்கப்பட்ட வேலையின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கணக் கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**நிலவளம்:**

விவசாயிகளுக்கு விரிவாக்கப் பணி யாக 'நிலவளம்' வேளாண்மைத் திங்கள் இதழை மாநில நிலவள வங்கி தொடர்ந்து நடத்தி வருகிறது. நிலவள வங்கிகளின் புதிய கொள்கை நெறிமுறைகளை யொட்டி, நிலவள வங்கிகளின் பணி களை, சித்தரித்துக் காட்டுகிற குறிப்பாக, சிறு விவசாயிகள் சமூகப் பொருளாதார நிலைகளை உயர்த்தும் நோக்கத்துடன் நிலவள வங்கிகள் ஆற்றி வருகிற பலதரப் பட்ட பணிகளைச் சித்திரிக்கின்ற புதிய அம்சங்கள் நிலவளம் இதழில் எடுப்பாக இடம் பெற்று வருகின்றன. இவ்விதழ் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ள



தொரு வழிகாட்டியாகத் திகழும் வண்ணம் இதன் பிரதிகள் விவசாய மக்களிடையே அதிக அளவில் பரவச் செய்ய சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**பயிற்சி**

வேளாண்மை மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான தேசிய வங்கியின் நிதி உதவியோடு 1976 ஜூலை திங்களி லிருந்து இளநிலைப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை மாநில நிலவள வங்கி பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இந்த பயிற்சி மையத்தில் 31.3.93 வரை 6 கருத்தரங்குகள் உட்பட 372 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில் இதுவரை பிரதம நிலவள வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், பாண்டியன் கிராம வங்கி, புதுவை மாநில நிலவள வங்கி, மாநில நிலவள வங்கி மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் உட்பட 8,682 பேர் பயன் பெற்றுள்ளனர். ●

## மது(ரை)ரச் செய்திகள்

● மதுரை மாநகருக்குத் 'தூங்காத நகரம்' என்றோர் சிறப்புப் பெயர் உண்டு. காரணம்- நகரின் முக்கியப் பகுதிகளுக்கு இரவு முழுவதும் நகரப் பேருந்துகள் விடப்படுகின்றன! இன்னொரு காரணம்- இரவெல்லாம் 'ஜே.ஜே' என்று கூட்டத்தோடு காணப்படும் நடைபாதைச் சிற்றுண்டிக் கடைகள். இந்தவகை இட்லிக் கடைகள் மேலமாசி வீதியில் அதிகம்!

★ தமிழ்நாடு மாநிலத்தின் தலைநகரமான சென்னையை அடுத்து, இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது மதுரை.

● 'அல்வா' என்றால் என்னவென்று நமக்குத் தெரியும். ஆனால் இதற்கு மதுரையில் வேறொரு நூதனப் பொருள் உண்டு. 'அல்வா கொடுப்பது' என்றால் ஏமாற்றுவதாம். இதன் அடிப்படையில் இருவருக்குள் நடந்த ஓர் உரையாடல்: ''நான் ஊருக்கே அல்வா கிண்டிப் போடறவன்; நீ எனக்கே அல்வா குடுக்கப் பார்க்கறியா?''

● மதுரை உணவு விடுதியின் வெளியே கட்டப்படும் பலகைகளில் 'இடியாப்பம்-நொதி' என்றோர் சொல் காணப்பட்டது; இடியாப்பத்தைத் தெரியாதவர் இருக்க முடியாது; 'நொதி' என்றால் என்ன தெரியுமோ- மசாலா கலந்த தேங்காய்ப் பாலாம்!

● மதுரையின் சுற்று வட்டாரக் கிராமப் பெயர்களில் சில வேடிக்கையாக உள்ளன: இதோ இரண்டொரு எடுத்துக்காட்டு: குட்டி மேய்க்கிப்பட்டி, போடி, வாடிப்பட்டி, அம்மாபட்டி, ஐயாபட்டி...

● தேனியிலிருந்து போடி செல்லும் வழியில் 3-வது கிலோ மீட்டரில் உள்ளது அடைக்கரைப்பட்டி. பெரும்பாலான ஞாயிற்றுக்கிழமை மாலை வேளைகளில் இந்த ஊரே பெரும்பாலும் காலியாகி விடுகிறது; எல்லோரும் தொலைக்காட்சியில் தமிழ்ப்படம் பார்க்க அடுத்தடுத்த ஊர்களுக்குப் போய்விடுவார்களாம். இத்தனைக்கும் பலபேர் தொலைக்காட்சிப்பெட்டி வாங்கியிருக்கிறார்கள். ஆனால், ''எந்த 'சானலும்' அறவே தெரியவில்லை; புகார் செய்தும் புண்ணியமில்லை'' என்கிறார்கள்.

தொகுப்பு: பி.எல்.ஆர்.

● மதுரை மாவட்டம், நஞ்சை-புஞ்சை எல்லா வகை வேளாண்மையும் மேம்பட்டதாக விளங்குகிறது. குறிப்பாக- பெரியகுளம் கோட்டம் உத்தமபாளையம், கம்பம் போன்ற பகுதிகள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று காட்சி தருகின்றன. நெல், மஞ்சள், கம்பு, சேனை, கடலை, சோளம், கரும்பு, வாழை, உளுந்து, பயறு, பூச்செடிகள்- என எல்லாமே செழித்து வளரும் மண்வளம் அப்பகுதிகளில் உள்ளது.

● மதுரை மாவட்டப் புறநகர்க் கிராமங்களில் பெரும்பாலானவை 'பட்டி' என்று முடிகின்ற பெயருடனேயே காணப்படுகின்றன. இதோ சில: நோட்டம்பட்டி, பூச்சிப்பட்டி, செட்டிப்பட்டி, உறங்காம்பட்டி நெல்லிப்பட்டி, நத்தம்பட்டி, ஜக்கம்பட்டி, அரைப்படித்தேவன்பட்டி, கத்தப்பட்டி, சிலார்பட்டி, ஆண்டிப்பட்டி, வெள்ளரிப்பட்டி, சுக்காம்பட்டி, கல்லுப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, பூச்சிப்பட்டி, லட்சுமிநாயக்கன்பட்டி, நரசிங்கம்பட்டி, வடுகப்பட்டி, உசிலம்பட்டி, நோட்டம்பட்டி, கணவாய்ப்பட்டி, ஹார்விபட்டி சித்தார்பட்டி...

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., மதுரை 625 001

## 1993-94ம் ஆண்டு திட்டம் பத்து முக்கிய திட்டங்கள் குறியீடு, முன்னேற்றம் செப்டம்பர் 93 திங்கள் முடிய

| வ. எண் | விபரம் | 1993-94-ம் ஆண்டிற்கான குறியீடு | செப்.93 திங்கள் முடிய விகிதாச்சார குறியீடு | செப்.93 திங்கள் முடிய முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1. | குறுகிய காலப் பயிர்க்கடன் | 2060.00 | 1030.00 | 1032.44 |
| 2. | பயிர்வாரி | | | |
| | 1. நெல் | 465.00 | 250.00 | 299.99 |
| | 2. இதர உணவுப்பயிர்கள் | 12.50 | 11.00 | 10.17 |
| | 3. எண்ணை வித்துக்கள் | 160.00 | 120.00 | 120.89 |
| | 4. பருப்பு வகைகள் | 10.00 | 8.00 | 10.24 |
| | 5. இதரம் | 1412.50 | 641.00 | 591.15 |
| | மொத்தம் | 2060.00 | 1030.00 | 1032.44 |
| 3. | நலிவுற்றோர்க்குக்குறுகிய காலக் கடன் 7·3% | 1503.80 | 751.90 | 760.63 |
| 4. | பொருட்பகுதி வழங்குதல் 50% | 1030.00 | 515.00 | 525.67 |
| 5. | மத்திய காலக்கடன் | 440.00 | 129.00 | 88.16 |
| 6. | இதில் நலிவுற்றோர்க்கு 73% | 321.20 | 94.17 | 61.49 |
| 7. | நகைக் கடன் | | | |
| | தொடக்க கூ.வங்கி அளவில் | 1650.00 | 825.00 | 1246.15 |
| | மத்திய வங்கி அளவில் | 1027.00 | 540.00 | 552.42 |
| 8. | ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல் | | | |
| | குறுகிய காலப்பயிர்க்கடன் 12% | 247.20 | 123.60 | 133.26 |
| | மத்திய காலக்கடன் 23% | 101.20 | 29.67 | 18.33 |
| 9. | உடல் ஊனமுற்றோருக்குக்கடன் வழங்குதல் | | | |
| | குறுகிய காலக்கடன் 1% | 20.60 | 10.30 | 11.04 |
| | மத்திய காலக்கடன் 1% | 4.40 | 1.29 | 1.98 |
| | நகைக்கடன் 1% | 26.77 | 13.65 | 14.93 |
| | வேளாண்மை சாராக்கடன் 1% | 0.40 | 0.20 | — |
| 10. | முன்னாள் இராணுவத்தினருக்கு கடன் வழங்குதல் | | | |
| | குறுகிய காலக்கடன் 1% | 20.60 | 10.30 | 11.02 |
| | மத்திய காலக்கடன் 1% | 4.40 | 1.29 | 1.83 |
| | நகைக்கடன் 1% | 26.77 | 13.65 | 16.32 |
| | வேளாண்மை சாராக்கடன் | 0.40 | 0.20 | — |
| 11. | மகளிர்க்குக்கடன் வழங்குதல் | | | |
| | குறுகிய காலக்கடன் 10% | 206.00 | 103.00 | 108.96 |
| | மத்திய காலக்கடன் 10% | 44.00 | 12.90 | 12.03 |
| | நகைக்கடன் 10% | 267.70 | 136.50 | 140.95 |
| | வேளாண்மை சாராக்கடன் 10% | 4.00 | 2.00 | — |
| 12. | கொதுவைக் கடன் (குறுகிய காலக்கடனில் 5%) | 103.00 | 51.50 | 56.58 |
| 13. | வேளாண்மை சாராக்கடன் | 40.00 | 16.00 | 7.09 |
| 14. | பங்குத் தொகை | | | |
| | மத்திய வங்கி அளவில் | 613.05 | 598.45 | 596.51 |
| | தொடக்க கூ.வங்கியளவில் | 723.49 | 720.53 | 702.23 |
| 15. | வைப்புத்தொகை சேகரித்தல் | | | |
| | தொடக்க கூ.வங்கி அளவில் | 1590.30 | 1325.40 | 1321.43 |
| | மத்திய வங்கி அளவில் | 10940.94 | 10233.94 | 9593.74 |
| | இதில் கூட்டுறவு அல்லாதது 65% | 7111.61 | 6652.06 | 6820.91 |
| | கூட்டுறவு | 3829.33 | 3581.88 | 2772.83 |

DIPR/265/MDU/93/300

## நத்தம் மலைப் பகுதியில்
## 5 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தில்
# விமானம் விதை தூவியது!

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் நத்தம் மற்றும் அழகர்மலை வனப் பகுதிகளில் 5 ஆயிரம் தரிசு நிலத்தில் விமானம் மூலம் விதைகள் தூவப் பட்டன.

நத்தம் வட்டாரத்தில் நிறைய மலைப் பகுதிகள் உள்ளன. இவை பெரும்பாலும் அடர்ந்த மரங்கள் இல்லாத தரிசு நிலப்பகுதிகளாக இருந்து வரு கின்றன.

மழை வளம் பெருக மரம் வளம் வேண்டும் என்ற அடிப்படையில் இந்த மலைப் பகுதியை மரங்கள் அடர்ந்த வனப் பகுதிகளாக மாற்று வதற்கு விமானம் மூலம் விதைகள் தூவும் பணி நடைபெற்றது.

விமானம் மூலம் விதை தூவும் பணி தொடக்க விழா திண்டுக்கல்லில் மில் அதிபர் சவுந்திர ராஜாவுக்குச் சொந்தமான விமான தளத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரமேஷ்ராம் மிஸ்ரா அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திண்டுக்கல் நாடாளு மன்ற உறுப்பினர் சி. சீனிவாசன், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. காந்திராஜன், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம். துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விதை தூவும் பணிக்கு வாயுதூத் விமானம் பயன்படுத்தப்பட்டது. இந்த விமானத்தில் சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள், பறந்து சென்று, மலை களின் மீது தாழ்வாகப் பறந்து விதைகள் தூவப் பட்டதைப் பார்வையிட்டார்.

இந்தப் பணி குறித்து மாவட்ட வனத் துறை அலுவலர் திரு. ஆர். கண்ணன் விளக்கினார்.

விமானம் மூலம் விதை தூவும் இந்தச் செயல் இம்மாவட்டத்தில் 5-வது முறையாக நடைபெறு கிறது. முதன்முதலில் 1988-89-இல் விமானம் மூலம் விதை தூவுவது ஆரம்பிக்கப்பட்டது.

தற்பொழுது நத்தம் கரத்த மலை, அழகர்மலை ஆகிய பகுதிகளில் 5 ஏக்கரில் 20 டன் விதைகள் தூவப்படுகிறது. புளி, மூங்கில், உசிலை, வேம்பு போன்ற 17 விதமான மரங்களின் விதைகள் தூவப்படுகிறது. இதற்கு 6 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவாகிறது.

இந்த முறை குறுகிய காலத்தில் அதிகமான இடங்களில் மலைப் பகுதியில் விதை தூவப் படுவது பயன் உள்ளதாகத் தெரிகிறது.

கடந்த காலத்தில் செய்த இம்முறையால் நத்தம் கரந்தலைப் பகுதி, அழகர்மலைப் பகுதியில் வன வளம் அதிகமாக வளர்ச்சி பெற்று உள்ளது. இந்த மழை காலத்தில் செய்வது முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழ்நாட்டில் இந்த ஆண்டு இங்குதான் முதன்முதலில் செயல்படுத்தப்படுகிறது.

அண்ணா மாவட்டத்தில் மலைப் பகுதியில் 24 ஆயிரம் எக்டேர் நிலம் தரிசு நிலங்களாக உள்ளது கணக்கிடப்பட்டுள்ளதாக மாவட்ட வன அலுவலர் தெரிவித்தார்.

**கே.பி. நல்லதம்பி**
**செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல் அண்ணா மாவட்டம்,**
**திண்டுக்கல்.**



## மதுரை விசைத்தறி

உசிலம்பட்டி கோட்டத்தில் உள்ள தொட்டப்ப நாயக்கனூரில், 1985-ல் விசைத்தறி மையம் ஒன்று அமைக்கப்பட்டது.

27 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்ட இதுதான், மதுரை மாவட்டத்தில் அமைந்த முதலாவது விசைத்தறி மையமாகும். இதற்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், முற்றிலும் ஆதிதிராவிடர்களுக்காகவே உருவாக்கப்பட்டது இது.

ஒவ்வொரு நாளும் 2 'ஷிஃப்ட்' ஆக இங்கே 91 பேர் வேலை பார்க்கிறார்கள். பெண்கள் கிடையாது. இங்கே தயாரிக்கப்படும் காடா துணிகள், கோ-ஆப்டெக்ஸ் மூலமும், தனியார் மூலமும் வாங்கி விற்கப்படுகிறது.

இலாபத்தில் இயங்கிவரும் விசைத்தறி மையம் இது என்பது குறிப்பிடத்தக்கது.




## தமிழ் கற்றுக் கொடுக்க கம்ப்யூட்டர்!

**தமிழ் மொழியைக் கற்றுத் தருவதற்குக் 'கம்ப்யூட்டர் ஆணைத்தொடர்' (சாஃப்ட்வேர்) ஒன்றை அமெரிக்காவில் வாழும் தமிழ் இளைஞர் ஒருவர் உருவாக்கி இருக்கிறார். அமெரிக்காவில் வாழும் தமிழர் குடும்பங்களிடையே இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.**

**டாக்டர் பி. குப்புசாமி என்னும் அந்த இளைஞர் மேரிலாந்து மாநிலத்திலுள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் ஆய்வு விஞ்ஞானியாக இரு ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றி வந்தபோது தான் அவருக்கு இந்த எண்ணம் ஏற்பட்டது.**

**தமிழில் புத்தகம் ஒன்றை வெளியிடுவதற்கு அவர் விரும்பினார். ஆனால், தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தும் 'கம்ப்யூட்டர் ஆணைத்தொடர்' எதுவும் அமெரிக்காவில் அவருக்குக் கிடைக்கவில்லை. அன்றியும் அமெரிக்காவில் வாழும் தமிழ்க் குடும்பத்தினரின் குழந்தைகளில் பெரும்பாலோர் தமிழ் மொழி அறிவே இல்லாமல் இருப்பதையும் அவர் கண்டார்.**

**அவர்களுக்கு உதவும் வகையில், தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆணைத்தொடர் ஒன்றைத் தாமே தயாரிப்பது என்று டாக்டர் குப்புசாமி முடிவு செய்தார். 'சாஃப்டெக் கிரியேஷன்ஸ்' என்னும் நிறுவனத்தை அவர் சொந்தமாக நிறுவினார். தமிழ் மொழியைக் கற்பிக்கும் 'ஆணைத்தொடர்' (சாஃப்ட்வேர்) ஒன்றை உருவாக்கி இந்த ஆண்டின் தொடக்கத்தில் அவர் வெளியிட்டார். இந்த ஆணைத்தொடர் ஐ.பி.எம்., மெக்கின்டோஷ் என்னும் இருவிதக் கம்ப்யூட்டர்களுக்கும் ஏற்றதாகும்.**

**டாக்டர் குப்புசாமியின் இந்த அரிய சேவையைப் பாராட்டி, நியூயார்க் தமிழ்ச் சங்கம் அவருக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.**

— அமெரிக்கத் தகவல் நிலையம்.

## பூகம்பம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

பூகம்பத்திற்குத் தயார் நிலையில் இருப்பது எப்படி என்று மக்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக், கலிபோர்னியாவில் கடந்த 50 ஆண்டுக் காலமாகவே பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பள்ளிகளிலும், தீயணைப்பு நிலையங்களிலும் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. பூகம்பங்கள் வரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும். இடிபாடுகளிலிருந்து மக்களை மீட்பது எப்படி என்று அங்குச் சொல்லித் தரப்படுகிறது.

—இவ்வாறு கூறுகிறார் ரிச்சர்ட் ஆண்ட்ரூஸ் என்னும் அமெரிக்க நிபுணர்.

"பூகம்பம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?"

அப்போது நீங்கள் ஏதாவது கட்டடத்திற்கு உள்ளே இருந்தால், வெளியே ஓடி வர முயல வேண்டாம். உள்ளேயே இருப்பதுதான் உங்களுக்குப் பாதுகாப்பானது. ஆனால், உள்ளே நீங்கள் ஒரு மேசைக்கு அடியிலேயோ அல்லது அதுபோன்ற இதர கனமான தடுப்புகளுக்கு அடியிலேயோ பதுங்கிக் கொள்வது நல்லது. ஏனென்றால், கட்டடங்கள் இடிந்து விழுந்தாலும், அதன் இடிபாடுகள் நேரடியாக உங்கள் மீது விழாமல் நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

பூகம்பம் நடக்கும் போது நீங்கள் கட்டடங்களுக்கு வெளியே இருந்தால், மின்சாரக் கம்பிகளுக்கும், கட்டடங்களுக்கும் அருகிலே இருக்காமல், விலகியே இருங்கள். அவை உங்கள் மேல் சரிந்து விழக்கூடும். எனவே, எச்சரிக்கையாக இருங்கள்.

## மல்கோவா மாம்பழம்

முக்கனிகளில் முதல் கனியாக விளங்கும் மாங்கனிக்கு தற்போது சீசன். உலக மாம்பழ உற்பத்தியில் 63 சதவிகிதம் இந்தியாவில்தான் உற்பத்தியாகிறது. உலகின் மொத்த மாம்பழ உற்பத்தியான 1.5 கோடி டன்னில் 95 இலட்சம் டன் இந்தியாவில் உற்பத்தியாகிறது.

நாடு முழுவதும் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தாலும், உத்திரப் பிரதேச மாநிலத்தில்தான் மிக அதிகமாக '34.27%' உற்பத்தி செய்யப்படுகிறது. அதைத் தொடர்ந்து, ஆந்திர பிரதேசம் '19.09%', பீகார் '13.04%', ஒரிசா '8.22%', கர்நாடக '5.01%' ஆகிய மாநிலங்களில் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் மாம்பழ உற்பத்தி அதிகமாக இருந்தாலும், ஏற்றுமதி குறைவுதான். 1985-86-இல் 23.33 கோடி மதிப்புக்கு 20.302 டன், 1990-91-இல் ரூ.33.12 கோடி மதிப்புக்கு 20,990 டன்னும் மாம்பழம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து மத்திய கிழக்கு நாடுகள், பிரிட்டன், கனடா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.





## முந்திரிக்கு முந்துங்கள்!

முந்திரி உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசு பல சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

1991-92-இல் 668.45 கோடி ரூபாய்க்கும் 1992-93-இன் ஏப்ரல்-டிசம்பரில் 577.45 கோடி ரூபாய்க்கும் ஆஸ்திரேலியா, ஜெர்மன், ஹாங்காங், ஜப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர், அமெரிக்கா, பிரிட்டன், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகளுக்கு முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. எனவே, முந்திரி பயிரிட முந்துவோம்!





# சென்னை நேரு ஸ்டேடியத்தில் சர்வதேசத் தடகளப் போட்டிகள் நடத்திட நவீன தடகளம்

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்

மாண்புமிகு முதலவர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் மேற்பார்வையில் 7½ மாத குறுகிய காலத்தில் மிக பிரமாண்டமான முறையில் ரூ.40 கோடி செலவில் நேரு ஸ்டேடியம் கட்டி முடிக்கப்பட்டு சாதனைச் சரித்திரமாகியது. இந்த நேரு ஸ்டேடியம் 'ஆசியக் கண்டத்தில் விளையாட்டு அரங்குகளின் ராணி' என வர்ணிக்கப்பட்டு அழகுற மிளிர்கிறது.

சர்வதேசத் தரத்துடன் அமைக்கப்பட்ட இந்த ஸ்டேடியத்தில், இந்த ஆண்டுத் தொடக்கத்தில் நேரு தங்கக் கோப்பை கால்பந்து போட்டி சிறப்பாக நடைபெற்றது.

சென்னை நகரின் அழகுக்கு மெருகூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுச் சிறந்து விளங்கும் இந்த வண்ணமிகு ஸ்டேடியத்தில் நவீன செயற்கைத் தடகளம், அமைக்கப்பட்டுள்ளது.

நேரு ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள இந்தச் செயற்கைத் தடகளத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைக்கிறார். அதையொட்டி சர்வதேசத் தடகளப் போட்டியும் தேசிய ஓபன் தடகளப் போட்டியும் நடைபெறும்.

தொடக்க விழா பிப்ரவரி 2-ந் தேதி பிற் பகலில் நடைபெறும். தடகளப் போட்டிகள் பிப்ரவரி 3-ந் தேதி தொடங்கி 5-ந் தேதி வரை நடைபெறும். விளையாட்டுத் துறையில் தமிழக இளைஞர் சமுதாயம் வியத்தகு வளர்ச்சி காண ஊக்கம் அளிக்கும் வகையில் சர்வதேச தடகளப் போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தீவிர ஆர்வம் கொண்டுள்ளார். அவரது இடைவிடாத முயற்சியின் பலனாகத்தான் இந்தப் போட்டி சென்னையில் நடத்தப்படுகிறது. இந்தப் போட்டிகளுக்கு முன்னால் வண்ணமிகு தொடக்க விழா நடைபெறும்.



இந்த சர்வதேசத் தடகளப் போட்டிக்கு விளையாட்டு வீரர்கள் - வீராங்களைகளை அனுப்பும்படி, ஏராளமான வெளிநாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அந்த நாடுகளில் இருந்து, விரைவில் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

தேசியத் தடகளப் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீரர்கள் - வீராங்கனைகள் உள்பட 900 பேர் பங்கு பெறுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

நவீன தடகளத்தின் தொடக்க விழாவையும் சர்வதேசத் தடகளப் போட்டியையும் சீரும் சிறப்பாக நடத்தி முடிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்தப் போட்டிகள் மற்றும் தடகளத் தொடக்க விழா குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில் தலைமைச் செயலகத்தில் 12.12.93 அன்று நடந்தது. தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் இந்தக் கூட்டத்தைக் 'கூட்டியிருந்தார்.

போட்டிக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க பல்வேறு கமிட்டிகள் அமைக்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# படமும் செய்தியும்



மாண்புமிகு கோவா மாநில முதல் அமைச்சர் வில்பர்ட் டிசோசா அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார் (27.12.93).



சென்னைக்கு வந்துள்ள பிரபல சரோட் இசைக் கலைஞர் உஸ்தாத் அம்ஜத் அலி கான், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார் (27.12.1993).



தமிழக அரசின் சார்பில் சேலத்தில் நடைபெற்ற 'மகாகவி பாரதியார்' பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு டி.எம்.செல்வ கணபதி அவர்கள் 'மகாகவி பாரதியார்' திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார் (21.12.93).


புழல் நீர்த்தேக்கம்


சோழவரம் நீர்த்தேக்கம்

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களைப் பார்வையிட்டார் (24.12.93)**




பூண்டி நீர்த்தேக்கம்




# சட்டமன்ற வரலாற்றில் தனக்கு எனத் தனி இடம் பெற்றவர் திரு.மாணிக்கவேலர்

**நூறாவது ஆண்டு பிறந்த நாள் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை**

''தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, கடந்த நூறு ஆண்டுகளாக, ஒரு பெரிய சகாப்தம் போன்று, கல்வி, இல்லறம், அரசியல், மற்றும் சமுதாய, மக்கட் பணி என, வாழ்க்கையின் பல்வேறு அங்கங்களை பல்வேறு நிலைகளிலும், நெறி முறைகளோடு வாழ்ந்து காட்டி, நமது அன்புக்கும், பண்புக்கும் உரியவராகவும், அனுபவத்திற்கும், ஆற்றலுக்கும் எடுத்துக் காட்டாகவும், கொள்கையிலும், கோட்பாட்டிலும் உறுதி மிக்கவராகவும் சிறந்து விளங்கி, இன்று நம்மிடையே நூற்றாண்டு விழா நாயகராக, ஒரு மாபெரும் சாதனையாளராக அமர்ந்திருக்கும் பெருந்தகை, திரு எம்.ஏ. மாணிக்கவேலர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர்களில், பெரியவர் திரு மாணிக்க வேலரைப் போன்று, நீண்ட, நெடிய பொது வாழ்வு அனுபவத்தையும், அரசியல் முதிர்வினையும் கொண்டு விளங்கும் தலைவர்கள், மிகச் சிலர் தான் உள்ளனர். பெரியவர் திரு மாணிக்கவேலர் அவர்கள், தமது நூறாவது ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கும், மகிழ்ச்சியான இந்த வேளையில், அதனையொட்டி அவருக்குப் பாராட்டு விழா ஒன்று நடத்தப் பெற வேண்டும் என்றும், அதில் நானும் கலந்துகொள்ள வேண்டும் என்றும், விழாக் குழுவினர் எனக்கு அழைப்பு விடுத்த போது, உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைந்தேன். தமிழ்ச் சமுதாயத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரது முன்னேற்றத்திற்காகவும், உயர்வுக்காகவும், தமது வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட பெரியவர், திரு எம்.மாணிக்கவேலார் அவர்களைப் பெருமைப் படுத்தும் வகையில், எடுக்கப் பெறும் இந்த இனிய விழாவில் நான் பங்கேற்பதை, என்னுடைய



கடமையாக மட்டும் இன்றி, பெருமையாகவும் கருதுகிறேன் என்பதை, இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால், பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதுகாவலர்களாக விளங்கி, அவர்களின் நலன்களுக்காக ஓயாமல் உழைத்து மறைந்து, திராவிட இயக்கத் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், ஆகியோரின் உயரிய கொள்கைகளையும், இலட் சியங்களையும், போற்றிப் பாதுகாக்கும் பணியில் தொய்வின்றி ஈடுபட்டிருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகவும், ஏழைகளின் நலன் காக்கும் மக்கள் அரசாம், தமிழக அரசின் முதலமைச்சராகவும், நான் இந்த விழாவில் பங்கேற்பது, அந்தப் புனிதத் தலைவர்கள் உருவாக்கி விட்டுச் சென்ற, திராவிட இயக்க உணர்வுகளுக்கு, வலுவூட்டி, உரம் கொடுக்கும் வகையிலும் அமைந்துள்ளது என்பதை, பெருமிதத் துடன் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடை கின்றேன்.

பெரியவர் திரு மாணிக்கவேலர் அவர்கள், வழக்கறிஞர் என்ற முறையிலும் சரி, தமது தனி வாழ்க்கையிலும் சரி, கண்ணியம், நேர்மை, கடமை உணர்வு, அரசியல் ஒழுக்கம் மற்றும் ஏழை எளியவர்களிடம் பரிவு, போன்ற உயரிய கொள்கைகளின் அடிப்படையில் ஒரு நூற்றாண்டு






வாழ்ந்து, சகாப்தத்தைப் படைத்திருக்கிறார் என்ற உண்மையை அறியும் போது, தமிழகம் இத்தகைய நன்னெறியாளர்களின் தொண்டினை, இன்னும் பன்னெடுங்காலம் தொடர்ந்து பெற வேண்டும் என்ற பேரவா, நம் அனைவரது மனங்களிலும் எழுகின்றது.

தனது 30-வது வயதிலேயே வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து, எம்.எல்.சி-ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், பெரியவர் திரு மாணிக்கவேலர் என்பது, பலருக்கு தெரியாத ஒரு செய்தியாகும். கிட்டத்தட்ட 10 ஆண்டு காலம், அவர் மேலவை உறுப்பினராகப் பணியாற்றி உள்ளார். 'காமன் வீல்' என்ற தோற்றுவித்து, 3 நாடாளுமன்ற இடங்களையும், 6 சட்டமன்ற இடங்களையும் கைப்பற்றினார். தென்னகத்தின் பல முக்கிய பகுதிகள் அடங்கிய அன்றைய 'சென்னை ராஜதானி'யில் ஆரோக்கியமான அரசியல் நிலவ வேண்டும் என்பதற்காகவும், திராவிட நாடு முழுமையும் வளம் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும், தமது 'காமன் வீல்' கட்சியின் முழு ஆதரவினை, 1952-இல் மூதறிஞர் ராஜாஜியின் அமைச்சரவைக்கு அளித்து, அவரது அமைச்சரவையில் அமைச்சராகப் பொறுப்பேற்று, பொது நலத்திற்கு புது அர்த்தத்தைத் தந்தவர், பெரியவர் திரு மாணிக்கவேலர் அவர்கள். அதன் பின்னர் 1957-இல், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தலைமையில் அமையப் பெற்ற அமைச்சரவைக்கு, தமது ஆதரவை அளித்து, அதிலும் அமைச்சராகப் பொறுப்பேற்று, 10 ஆண்டுகள் தொடர்ச்சியாத் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்காகவும், பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர், பெரியவர் திரு மாணிக்கவேலர் அவர்கள்.

தமிழக அமைச்சரவையில் வருவாய்த் துறை, மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, போன்ற முக்கியத் துறைகளுக்குப் பொறுப்பேற்று, அவர் ஆற்றிய மக்கள் பணிகள், இன்றும் அவரது புகழையும், பெருமையையும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

1962 முதல் 1964 வரை, டெல்லியில் ராஜ்யசபை உறுப்பினராகவும், பின்னர் 1964 முதல் 1970 வரை, அன்றைய சட்ட மேலவைத் தலைவராகவும், சிறப்பாகப் பணியாற்றி உள்ளார். அன்று அவர் ஆற்றிய பணியை, 1967-இல் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், பாராட்டி மகிழ்ந்ததிலிருந்து, பெரியவர் திரு மாணிக்கவேலர் பொது வாழ்க்கையில் கட்சி வேறுபாடுகள் இன்றி, அனைத்துத் தரப்பினராலும் போற்றிப் பாராட்டப்பட்டவர் என்பது தெரிய வருகிறது.

பணியாற்றும் போது சுறுசுறுப்புடனும், நேரம் தவறாமல் எதையும் காலத்துடன் செய்யும் பழக்கம் கொண்டவராகவும் இருந்து உள்ளார். சட்ட மன்றத்தில் மிகச் சிக்கலான பிரச்சினைகளுக்குக் கூட எளிதான தீர்வுகளைக் கண்டறிந்து, சட்ட மன்ற வரலாற்றில் தனக்கு என ஒரு தனி இடத்தை வைத்து இருப்பவர், திரு மாணிக்கவேலர் அவர்கள்.

சாதாரண ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பிறந்த ஒருவர், கல்விச் செல்வத்தை முழுமை யாகப் பெற்று, வாழ்வில் பொருட் செல்வம் மற்றும் இல்லறப் பேறுகள் அனைத்தையும் அடைந்து, பின்னர் பொது வாழ்வில் உன்னத நிலையினை அடைந்து, மக்களின் மனதில் தனக்கென ஒரு தனி இடத்தினைப் பிடித்து, இன்றைக்கும் நமது அனைவரின் பாராட்டுதல் களுக்கும், போற்றுதல்களுக்கும், உரியவராக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதே, ஒரு சாதனைச் சரித்திரம் அல்லவா?

பெரியவர் திரு மாணிக்கவேலர் அவர்களின் வாழ்க்கை, எண்ணற்ற படிப்பினைகளையும், நீண்ட அனுபவத்தின் பால் விளைந்த அரிய நிகழ்வுகளையும் கொண்டதாக, இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு வழி காட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டுவது, எனது கடமை எனக் கருதுகிறேன்.

திறந்த ஏடு போன்றும், தெளிந்த நீரோடை போன்றும் விளங்கும், பெரியவர் திரு மாணிக்க வேலர் அவர்களின் ஒரு நூறு ஆண்டுக் கால அற வாழ்வு, தமிழ்நாட்டை முன்னேற்றும் பணியில், அதன் பெருமையை உயர்த்திடும் பணியில், நமது கடமையினை நாம் செவ்வனே ஆற்ற, நமக்கு இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வழிகாட்ட வேண்டும், துணை நிற்க வேண்டும் என்ற எனது பேரவாவினை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியவர் திரு எம்.ஏ.மாணிக்கவேலர் அவர்கள், மேலும் பன்னெடுங்காலம் நம்மிடையே வாழ்ந்து, தமிழகத்தின் தன்னிகரற்ற பெருமையைக் காக்கும் பணியில், நம் அனைவருக்கும் உறுதுணையாக விளங்க வேண்டும் என்று கூறி, முதலமைச்சர் என்ற முறையில், தமிழகத்துப் பெருமக்கள் அனைவரின் ஒட்டுமொத்த சார்பாகவும், பொதுச் செயலாளர் என்ற முறையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கண் மணிகளின் சார்பாகவும், பெரியவர் திரு எம்.ஏ. மாணிக்கவேலர் அவர்களுக்கு, எனது உளங்கனிந்த நூற்றாண்டு பிறந்த நாள் நல் வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மேலும், பெரியவர் திரு எம்.ஏ. மாணிக்க வேலர் அவர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 3 இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்குவதில் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.


கூட்டுறவே! நாட்டுயர்வு!!

# எ.1254 தேனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

தேனி - 626 531

மதுரை மாவட்டம்

கிளைகள்: கம்பம் ○ சின்னமனூர் ○ பெரியகுளம் ○ தேவதானப்பட்டி ○ கடமலைக்குண்டு ○ கண்டமனூர்.

ஜின்னிங்பேக்டரி ○ தேனி-அல்லிநகரம்

நவீன அரிசி ஆலை, சின்னமனூர்.

**தேனி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம்:**

1. அங்கத்தினர்களின் வேளாண் விளைபொருள் விற்பனை செய்தல்.
2. வேளாண் இடுபொருட்கள் விநியோகம்.
3. மளிகைச் சாமான்கள் விநியோகம்.
4. அங்கத்தினர்களின் பருத்தியை நல்ல முறையில் குறைந்த அளவுக் கட்டணத்தில் அரவை செய்து கொடுத்தல்.
5. அங்கத்தினர்களின் நெல் நல்ல முறையில் குறைந்த அரவைக் கட்டணத்தில் அரவை செய்துகொடுத்தல்.
6. தமிழ்நாடு பாடநூல் நிறுவன மொத்த மற்றும் சில்லரை விநியோகம் செய்தல்.
7. டியூகாஸ் பூச்சிமருந்து மொத்தம் மற்றும் சில்லரை விநியோகம் செய்தல்.
8. பெரியகுளம், உத்தமபாளையம், ஆண்டிபட்டி, உசிலம்பட்டி மற்றும் பேரையூர் ஆகிய தாலுகாக் களுக்கு முதன்மைச் சங்கமாக இருந்து இணைப்புச் சங்கங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநி யோகம் செய்தல்.

ஆகிய பணிகளை செவ்வனே செய்து வருகிறோம். அங்கத்தினர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து நல் ஆதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்

ஆர். சுந்தரம், எம்.காம்.,

துணைப்பதிவாளர்/தனி அலுவலர்



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

## எளிமையானவை! நேர்த்தியானவை!
## மேன்மை மிகுந்தவை!
## தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23






